3. முன்னுரை

3.1. பழங்குடிகள்

3.1.1. பழங்குடிகள் பெயர் விளக்கம்

3.1.2. பழங்குடிகளை அறிவதன் தேவை

3.1.3. இந்தியப் பழங்குடிகள்

3.1.4. தமிழகப் பழங்குடிகள்

3.1.5. தமிழகத்திலுள்ள அட்டவணைப் பழங்குடிகள்

3.1.5.1. மலையாளி - பெயர் காரணம்

3.1.5.2. இலக்கியச் சான்றுகள்

3.1.5.3. மலையாளிகளின் பூர்விகம் பற்றிய கதை

3.1.5.4. கதைகளின்வழி கண்ட முடிவுகள்

3.1.5.5. பண்பாட்டுச் சான்றுகள்

3.1.5.6. தொல்லியல் சான்றுகள்

3.1.5.7. வரலாற்று நிகழ்வுகள்

3.1.5.8. பஞ்சமும் குடிபெயர்வும்

3.1.5.9. இருவகை மலையாளிகள்

3.1.5.9.1. மலையாளிகளைப் பிறர் அழைக்கும் விதம்

3.1.5.9.2. கவுண்டர் சொல் விளக்கம்

3.1.5.9.3. மலையாளிகளைக் கவுண்டர் என அழைத்தல்

3.1.5.9.4. மலையாளி இனக் குடியிருப்புக்கள்

3.1.5.9.5. மக்கள் தொகை

3.1.5.9.6. தோற்றப் பொலிவு

3.1.5.9.7. மொழி

3.1.5.9.8. ஆடவர் உடைகள்

3.1.5.9.8.1. பெண்கள்

3.1.5.9.8.2. சிறுவர் சிறுமியர்

3.1.5.9.9. உணவு முறைகள்

3.1.5.9.9.1. கிழங்கு வகைகள்

3.1.5.9.9.2. கீரை வகைகள்

3.1.5.9.9.3. தானிய வகைகள்

3.1.5.9.9.4. காய்கறிகள்

3.1.5.9.9.5. பழ வகைகள்

3.1.5.9.9.6. கொட்டை வகைகள்

3.1.5.9.10. இறைச்சி வகைகள்

3.1.5.9.11. அணிகலன்கள்

3.1.5.9.12. வீடுகளின் அமைப்பு
3.1.5.9.13. குடும்ப அமைப்பு
3.1.5.9.13.1. தனிக் குடும்பம்
3.1.5.9.13.2. கூட்டுக் குடும்பம்
3.1.5.9.14. சமுதாய அமைப்பு
3.1.5.9.14.1. நிர்வாகிகள் தேர்வு செய்யும் முறை
3.1.5.9.14.2. நாட்சேவர் (ஓடு பிள்ளை)
3.1.5.9.14.3. பஞ்சாயத்துக் கூடுதல்
3.1.5.9.14.4. பஞ்சாயத்துக் கட்டுப்பாடுகள்
3.1.5.9.14.5. பஞ்சாயத்தின் தனித்தன்மைகள்
3.1.5.9.14.6. முறி வாங்குதல்
3.1.5.9.14.7. குற்றமும் தண்டணையும்
3.1.5.9.14.8. அதிகப்படியான தண்டணைகள்
3.1.5.9.15. கல்வி
3.1.5.9.16. பொருளாதாரம்
3.1.5.9.17. மலையாளிகளும் விலங்குகளும்
3.1.5.9.17.1. மாடுகள்
3.1.5.9.17.2. ஆடுகள்
3.1.5.9.17.3. நாய்கள்
3.1.5.9.17.4. பன்றிகள்
3.1.5.9.18. சாவடி அல்லது சத்திரம்
3.1.5.9.19. சந்தை
3.1.5.9.20. கூட்டுறவுக் கடை
3.1.5.9.21. மலையாளிகளின் சுவற்று ஓவியம்
3.1.5.9.22. பிற இனத்தவரோடு தொடர்பு
3.2. தொகுப்புரை

## 4. முன்னுரை

மனிதனின் தொல்குடி வாழ்க்கை முறையிலிருந்தும் வளர்ந்து வரும் மாற்றங்களைக் கண்டும் வாழ்வை நெறிப்படுத்திக் கொண்டவர்கள் பழங்குடிகள். இவர்கள் வாழும் இடங்களை மையப்படுத்திச் சூழ்நிலைக்கு ஏற்ப இவர்களின் பண்பாடும் காணப்படுகிறது. ஆனால், ‘பழங்குடிகள்’ என்றால் நாகரிகமற்ற, வெளி உலக மக்களோடு தொடர்பு கொள்ளாத அல்லது தொடர்பு கொள்ள விரும்பாத மக்களைக் குறிப்பதாக உள்ளது. இப்பழங்குடிகள் உயர்ந்த மலைகளிலும், காட்டுப் பகுதிகளிலும், சமவெளியிலும் வாழ்பவர்களாக உள்ளனர். சிலர் நாடோடிகளாகவும் வாழ்கின்றனர்.

பழங்குடிகள் என்ற உடனே, சமுதாய வளர்ச்சியில் மிகவும் பின் தங்கிய கல்வியறிவு இல்லாத மக்கள் தான் நம் கண்முன் நிற்பர். “காடுகளை விட்டு நதிக்கரைக்கு வந்த இம்மக்கள் தங்கள் பழைய நிலையை மறந்து புதிய கலாச்சாரத்தோடும், பண்பாட்டோடும் வாழ முற்பட்டனர். ஆனால், ஒரு சில இனக்குழுக்கள் மட்டும் புவியியற் சூழலினால் ஒதுக்கப்பட்டுக் கல்வியறிவின்றி மூடநம்பிக்கைகளையும் பழமையினையும் பற்றுக்கோடாகக் கொண்டு இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர்”[1]. அதே நேரத்தில் புதிய புதிய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியாலும், பிற சமூகங்களின் தலையீட்டாலும் இயற்கையைச் சேதமாக்கிப் பழங்குடியினரின் பண்பாட்டை நாசமாக்கி வரும் இந்தச் சூழ்நிலையிலும் இன்றும் இயற்கையோடு இணைந்து தங்களுடைய தேவைகளைச் சுருக்கி இயற்கையின் நன்பர்களாக பழங்குடிகள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தியாவில் பழங்குடி இனத்தவர்களைக் குறித்த முறையான ஆய்வுகள் ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே மேற்கொள்ளப்பட்டன. பழங்குடிகளை வட இந்தியப் பழங்குடிகள், தென்னிந்தியப் பழங்குடிகள், இந்தியப் பழங்குடிகள் என்னும் நோக்கில் அவர்களைக் குறித்த நூல்களும் வெளிவந்துள்ளன. தென்னிந்தியப் பழங்குடிகள் பற்றிய செய்திகளை ‘எட்கர் தர்ஸ்டன்’, ‘எ.எ.டி,லூயில்’, ‘எல்.எ.கிருஷ்ணய்யர்’ ஆகியோரின் நூல்களிலிருந்தும் அறிய முடிகின்றது. “இந்தியப் பழங்குடியினர் ஒரு கால கட்டத்தில் நகர வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் என்றும் பிற்காலத்தில் ஏற்பட்ட அரசியல், சமூகக் காரணங்களால் மலைப்பகுதிக்கு விரட்டப்பட்டு பழங்குடிகளாயினர்”[2] என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த முடிவினை ஏற்றுக்கொண்டால், அவர்களின் வாய்மொழி வரலாறு, பேச்சுமொழி, வாய்மொழி இலக்கியங்கள், பண்பாடு, நம்பிக்கைகள் போன்றவற்றைத் தொகுத்து ஆராயும் போது அப்பழங்குடி மக்கள் காடுகளுக்குச் சென்றதற்கான உண்மை வரலாறு தெரியவரும். சவ்வாதுமலை மலையாளி இனப் பழங்குடி மக்களும் காஞ்சிபுரத்திலிருந்து இப்பகுதிக்குக் குடியேறியவர்கள் என்று இவர்தம் வாய்மொழி வழக்காறுகள் கூறுகின்றன.

## 3.1. பழங்குடி (Tribes) பெயர் விளக்கம்

“மானிடவியலில் பெருவழக்காகப் பயன்படுத்தப்படும் ‘Tribe’ என்னும் சொல் இலத்தின் மொழியில் ‘மூன்றில் ஒன்று’ (one third) எனப்படும். அதாவது, உரோம் நகரை மூவர் ஒன்றுகூடி நிறுவினர் என்பதும் அதில் ஒருவரைக் குறிக்கப் ‘பழங்குடி’ (Tribe) என்னும் சொல் வந்ததென்பதும் ஒரு வழக்கு. **‘பழங்குடி’** என்னும் பொருளுடைய சொல் முதன் முதலில் எபிரேயர்களைக் குறிப்பிடப் பயன்பட்டது. எபிரேயர்கள் கி.மு.1000 ஆண்டு வரை கட்டுக்கோப்பற்ற எளிய நிலையில் 12 குழுக்களாக வாழ்ந்தனர். ஒவ்வொரு குழுவும் தங்கள் குடிவழியை **‘ஜேக்கபின்’** (jacob) 12 புதல்வர்களோடுத் தொடர்புபடுத்திக் கொண்டது. ஜேக்கப் அனைவருக்கும் பொது மூதாதையராக விளங்கினான். அதன்பின் அக்குழுக்கள் இஸ்ரேலின் 12 பழங்குடிகள் எனவும் கூறப்பட்டன. அதன் பின்னரே ‘பழங்குடி’ என்னும் சொல் பொதுவான மூதாதையரிடமிருந்து தோன்றிய பல குடும்பங்களைக் கொண்ட எந்த ஒரு குழுவையும் குறிக்கும் சொல்லாயிற்று”[3]. அதன் பின்னரே ‘Tribe’ என்னும் ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாக ‘பழங்குடி’ என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. தமிழில் பழங்குடிகள் என்னும் சொல்லுக்கு இணையாக ‘இனக்குழு மக்கள்’, ‘மலைவாழ் மக்கள்’, ‘ஆதிவாசிகள்’ என்றும் பல்வேறு சொற்கள் தமிழறிஞர்களால் கூறப்படுகின்றன. ‘வெரியர் எல்வின்’, ‘லூயிஸ்’ போன்றோர் ‘Tribes’ என்பதற்கு நாகரிகத்தில் பின் தங்கியவர்கள் என்னும் பொருளில் பயன்படுத்துகின்றனர்.

### 3.1.1. பழங்குடிகள் என்னும் சொல்லுக்கு அறிஞர்கள் தரும் விளக்கங்கள்.

‘பழங்குடிகளுக்கென்று சில தனித்த பண்பாடு அடையாளங்கள் உண்டு. அவற்றின் அடிப்படையிலேயே ஒரு குடியினைப் பழங்குடி எனக் குறிப்பிட வேண்டும்’ என்று மானிடவியலறிஞர்கள் உறுதியாகக் கூற முற்பட்டனர். “ஒரு பழங்குடியைச் சேர்ந்த அனைவரும் குறிப்பிட்ட நிலப்பகுதிக்குள் வாழ்வர். அந்த நிலப்பகுதி துண்டு துண்டாகச் சிதறிக் காணப்படாமல் ஒரு தொடர்ச்சியைக் கொண்டதாக இருக்கும். அந்நிலப் பகுதிக்குள் வாழும் அனைவரும் ஒரு பொதுவான மூதாதையரிடமிருந்து தோன்றியவர்கள் என்று எண்ணுகின்றனர். அதனால் அனைவரும் பொதுவான பெயரைக் கொண்டிருக்கின்றனர். அனைவரும் ஒரே மொழியைப் பேசுபவர்களாகவும், பொதுவான பண்பாட்டைக் கொண்டவர்களாகவும் இருப்பர். பழங்குடி என்னும் சமூக அமைப்பில் அனைவரும் ‘அகமண’ (Endogamy) முறையைக் கொண்டவர்கள். இருப்பினும் சமூக அமைப்பில் பல புறமணக் குழுக்களும் இடம் பெற்றிருக்கும். பழங்குடியைச் சேர்ந்த அனைவரும் ஓரினத்தவர் என்ற உணர்வும் நாம் என்ற உணர்வும் (we felling) மிகுந்தவர்களாக

இருப்பர். அதனால் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் கட்டுப்பாடும் கொண்டவர்களாகத் திகழ்வர்''[4] என்கிறார். பக்தவத்சல பாரதி.

பழங்குடி என்பதை மஜீம்தார் பின்வருமாறு வரையறை செய்கிறார். ''பொதுவான பெயரையும், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தன்மையையும், ஒரே மொழியைப் பேசும் இயல்பையும், திருமணம் செய்யும் தொழில் (அ) பணியில் சில விலங்குகளைக் கொண்டு விளங்கும் தன்மையையும் உடையவராய் ஒருவருக்கொருவர் கட்டுப்பாடுடனும், பொருள்களைப் பரிமாறிக் கொண்டும் வாழும் பல குடும்பங்களின் தொகுதியே பழங்குடியாகும்''[5].

இந்திய அரசியலமைப்பின் ஷரத்துக்கள் 342-இன் கீழ் 'பழங்குடியினர்' என்பதற்குச் ''சில வரையறுக்கப்பட்ட பகுதியில் தங்களுக்குள் ஓர் கட்டுப்பாட்டை வகுத்துக்கொண்டு பொது அமைப்பின் கீழ் வாழ்பவர்கள்''[6] என்றும் ''பழங்குடியினர் என்பவர்கள் குறிப்பிட்ட பகுதியில் ஒரு பொது மொழி, பொது அரசாங்கம், பொது செயல்பாட்டின் கீழ் வாழ்பவர்கள் ஆவர்''[7] என்றும் பரதன் குறிப்பிடுகின்றார்.

''பழங்குடியின் அனைத்துப் பண்புகளையும் ஏற்கும் ஒரு பழங்குடியினர், மிகத் தொடக்கக் காலம் முதல், அவ்விடத்திலேயே காணப்படுபவர்கள் 'பழங்குடி' என்று அழைக்கப்படுவர். இவர்கள் வாழும் நிலப்பரப்பிற்கு முதன் முதலில் குடியேறியவர்களாக இருப்பதால் இவர்களின் பழமை பல நூற்றாண்டுகளைக் குறிப்பிடும் படியாக இருக்கும். இதனால் இவர்கள் மண்ணின் மைந்தர்கள் (Nutochthon) என்றும் கூறப்படுவர். ஆயிரங்கணக்கான ஆண்டுகட்கு முன்னரே இடம்பெயர்ந்து தங்கள் வாழிடத்தை அமைத்துக் கொண்டிருக்கும் பழங்குடியினர் தாம்வாழும் நிலப்பரப்பிலே தோன்றியவர்களாக இருக்கமாட்டார். 'முதுபழங்குடியினர்', 'தொல்பழங்குடியினர்', 'பழங்குடியினர்' ஆகியோர் எழுத்தறிவு தோன்றுவதற்கு முந்தைய காலத்திலிருந்து வாழ்ந்து வருவதால் இவர்கள் 'எழுத்தறிவிற்கு முந்தைய சமூகத்தினர் என்றும் சொல்லப்படுவர்''[8].

பரிமேலழகர் 'பழங்குடி' என்னும் சொல்லுக்குத் ''தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார்''[9] எனப் பொருள் தருகிறார். ''இன்று இந்திய நாட்டில் மூன்று கோடிக்கும் அதிகமான பழங்குடி மக்கள் வாழ்கின்றனர்''[10] என்கிறார் க.கைலாசபதி. சுருக்கமாகக் கூறின் நாகரிகமற்ற ஆதிகால மக்களுக்கும் நாகரிக வளர்ச்சியின் உச்ச நிலையை எட்டிவிட்ட தற்கால மக்களுக்கும் இடையே ஓர் பாலம் போல அமைபவர்கள் 'பழங்குடிகள்' என்று கூறலாம்''[11]. இப்பழங்குடியினருள் தமிழகத்தைப் பொருத்தமட்டில் 36 வகையான பழங்குடியினர் வாழ்வதாக 2007 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்புக் கூறுகிறது.

### 3.1.2. பழங்குடிகளை அறிவதன் தேவை

"வடிவேலெறிந்த வான்பகை பொறாது
ப.்.றுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள"

(சிலம்பு 11:18 - 20)

என்னும் வரிகள் தமிழ்க் குடி மூத்தக்குடி என்பதற்குப் பழந்தமிழ் இலக்கியங்கள் சான்றாக உள்ளதைக் காணமுடிகிறது. இளம்பூரணர் கூற்றும் இந்த உண்மையை உணர்த்தி நிற்கின்றது. திருக்குறளில் பழங்குடி என்னும் தொடரை விளக்குகையில்

"பரிமேலழகர் சேர, சோழ, பாண்டியர் என்றாற் போல
படைப்புக் காலந்தொட்டு மேம்பட்ட குடி"[11] என்று கூறுவதைக் காணலாம்.

பழங்குடி இன மக்கள் பற்றிய மிக நுட்பமான ஒப்பியல் ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இது பண்பாட்டுத் தளத்தில் ஒரு மிகப்பெரும் வெற்றிடத்தைத் தொடர்ந்து நிலை நிறுத்தி வருகிறதெனலாம். பழங்குடிகள் பல்வேறு படிநிலைகளில் தத்தம் பண்பாட்டுத் தனித்துவங்களைக் காத்துக்கொண்டும், பல்வேறு நிலைகளில் அண்டைப் பண்பாடுகளுடன் மற்றும் மொழிகளுடன் உறவாடி மாற்றம் பெற்றும் வருகின்றனர்.

மனிதகுலம் அடைய விரும்பும் மிக உயர்ந்த சமூக விழுமியங்களும் மேலைச்சமூகத்தார் வளர்த்துக் கொண்டதாக எண்ணுதற்குரிய விழுமியங்களும் இந்தியாவில் பழங்குடிகளிடம் பெரிதும் இருப்பினும் சாதியப் படிநிலையற்ற சமூகம் ஆண், பெண் பாலின உறவில் சமத்துவம், ஆணாதிக்கம் குறைந்த சமூக வாழ்வு, தனி மனித சுதந்திரம் தன்னியல்பு போக்கு மிகுதியாக இல்லாமைப் போன்ற பல உகந்த கூறுகள் இன்னும் பழங்குடிகளின் பண்பாட்டில் வளராமல் உள்ளன. எனவே, பழங்குடிகளைப் பற்றி அறிவதன் தேவை அவசியமாகிறது.

"உலகளாவிய நிலையில் மனித சமூகங்கள், பண்பாடுகள் உருவாக்கியுள்ள வேறுபாடுகளை எல்லாம் உள்ளடக்கி மனிதச் சமூகத்தின் உள்ளார்ந்த போக்குகளை அறிவது மானிடவியலின் மற்றொரு முக்கிய இலக்காகும். இத்தகு போக்குகளை ஆராய்வதில் தமிழ் மண்ணின் பூர்வக்குடிகளின் பதிவுகள் மிக இன்றியமையாதவை"[12]. எனவே பழங்குடிகளை இனங்காண்பதற்குச் சில அளவு கோல்கள் முன்வைக்கப்பட்டன. அவர்கள் பழங்குடித் தோற்றம் கொண்டவர்களாகவும் பூகோள ரீதியாகத் தனித்தொதுங்கிய வாழ்விடத்தைக் கொண்டவர்களாகவும் தனித்துவமான பண்பாடு, மொழி கொண்டவர்களாகவும் இருப்பது முக்கியப் பண்புகளாகக் கொள்ளப்பட்டன. 1941-இல் தான் பழங்குடிகளை அவர்களின் இனத்தோற்றம் அடிப்படையில் கணக்கெடுக்கத் தொடங்கினர்.

கணக்கெடுப்பின் போது அட்டவணைப் பழங்குடிகளையும், அட்டவணைச் சாதிகளையும் இனங்கண்டு பதிவு செய்வதற்கும் பின்வரும் காரணிகள் முன்வைக்கப்பட்டன. 1931-ஆம் ஆண்டு குடி மதிப்பிற்குப் பொறுப்பு வகித்த அன்றைய ஆணையர் (சென்சஸ் கமிஷனர்) **'ஹட்டன்'** ஒரு குறிப்பினை வட்டார கண்காணிப்பாளர்களுக்கு அனுப்பினார். அதில் பின்வரும் காரணிகளை மனதில் கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

ஒரு சமூகம் சாதியரீதியில் ஒடுக்கப்படுமானால் அது நிச்சயம் அட்டவணைச் சாதியாக இனங்காணப்பட வேண்டும். இதற்குச் சாதியினர் ஊர் வரியைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டவர்களாக இருப்பர். மேலும், ஊர் கோயில், குளம், பள்ளி ஆகியவற்றில் பங்கு பெறுவதற்கும் தடை விதிக்கப்பட்டவர்களாக இருப்பர். உணவு, நீர் போன்றவற்றை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியாதவாறு தீட்டு ஏற்படுபவர்களாக் கருதப்படுவார்கள். அடுத்து, மற்ற சாதிகளிடம் நின்று பேசும் போது இடைவெளி கடைப் பிடிக்கப்படுவதையும் காணமுடியும். இவை போன்ற இன்னும் சில காரணிகளை இனங்கண்டு அவர்களை அட்டவணை சாதிகளாகக் குடிமதிப்பில் பதியுமாறு ஹட்டன் அறிவுறுத்தினார்.

"ஆங்கில உயர் அதிகாரியான 'ஹட்டன்' இந்தியச் சாதி முறையை நன்குணர்ந்து கொண்டதால் மேற்கூறிய கூறுகளை மையமிட்டு அட்டவணைச் சாதிகளைக் குடிமதிப்பில் சேர்க்குமாறு கேட்டுக் கொண்டார். இவ்வாறாக காலனிய ஆட்சிக் காலத்தில் அட்டவணைச் சாதிகளும், அட்டவணைப் பழங்குடிகளும் இனங்காணப்பட்டார்கள்"[13].

விடுதலைக்குப்பின் பல சமூகங்கள் பழங்குடியாக அங்கீகாரம் பெற வேண்டும் என விரும்பின. இந்தியச் சூழலில் ஒரு சமூகம் பழங்குடியாக மாறவேண்டுமானால் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இது குறித்து அரசியல் அமைப்புச் சட்டத்தின் 342-வது பிரிவு கூறுவன பின்வருமாறு.

1. மாநில அரசு ஆளுநர் மூலம் பரிந்துரைக்கும் ஒரு சமூகத்தைக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிப்பதன் வழி ஒரு சமூகம் அட்டவணைப் பழங்குடி என அங்கீகாரம் பெறும்.
2. இதற்கு முன்னர் மக்களவையானது அச்சமூகத்திற்கு அத்தகு அங்கீகாரம் கிடைக்கச் சட்டம் இயற்றும்.
3. இந்திய அரசியல் சட்டம் 342-இன் படி அட்டவணையில் சேர்க்கப்படும் சாதிகள், பழங்குடிகள் பெயர்களை மாற்றவும், புதியதாகச் சேர்க்கவும், பட்டியலிலிருந்து நீக்கவும் மக்களவை அனுமதிப்பதோடு குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற வேண்டும். 1956, 1976 ஆகிய இரண்டு ஆண்டுகளில் அட்டவணையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன.
4. அட்டவணைப் பழங்குடிகள், அட்டவணைச் சாதிகள் ஆகியவற்றின் பட்டியல் தேசிய அளவில் தாயரிக்கப்பட்டது. பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் மட்டும்

மாநில அளவில் தாயரிக்கப்பட்டது. இதன்பின்னர் மைய அரசு பழங்குடிகளிலேயே மிகவும் தொன்மையானவர்களை இனங்கண்டு அவர்களுக்குப் பல சலுகைகள் தர விரும்பியது. இதற்காக "மைய அரசின் திட்டக்குழு 1969 இல் **'சிலு ஆவோ குழு'** ஒன்றை நியமித்து இந்திய அளவில் மிகவும் தொன்மையான பழங்குடிகளை இனங்காணுமாறு கேட்டுக் கொண்டது. இதன்படி இந்தியா முழுவதிலும் 75 தொன்மையான பழங்குடி குழுக்கள் இனங்காணப்பட்டன"[14].

### 3.1.3. இந்தியப் பழங்குடிகள்

"உலகில் வாழும் பழங்குடியினருள் மூன்றில் ஒரு பகுதியினர் இந்தியாவில் வாழ்கின்றனர். இவர்களில் 90 விழுக்காட்டினார் காடுகளில் வாழ்கின்றனர். இந்தியாவின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி ஒவ்வொரு பத்தாண்டிலும் பழங்குடி மக்கள் வளர்ச்சி கண்டறியப்பட்டு வருகின்றது. இவர்களின் எண்ணிக்கை 1951-இன் மக்கள் தொகைக் கணக்குப்படி 20 மில்லியனாக இருந்தது. 1981- இன் கணக்குப்படி 66.5 மில்லியனாக உயர்ந்துள்ளது"[15].

இந்தியாவில் ஏறக்குறைய 500-க்கும் மேற்பட்ட பழங்குடி இனக்குழுவினர் வாழ்கின்றனர். 1981-ஆம் ஆண்டின் குடி மதிப்பின்படி இந்தியாவில் பழங்குடிகளின் மொத்த எண்ணிக்கை 51,628,638 ஆகும். இது இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 7.76% ஆகும். லட்சத்தீவுப் பகுதியிலும் 93.83% பழங்குடிகள் வாழ்கின்றனர். இந்தியாவில் பழங்குடியினர் இல்லாத பகுதிகள் பஞ்சாப், ஹரியான, சண்டிகர், புதுதில்லி போன்றவைகள் ஆகும். புதுச்சேரியில் ஐந்து வகையான பழங்குடிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலேயே பழங்குடிகள் குறைவாக உள்ள மாநிலம் பழைய உத்திரபிரதேசம் (0.21%) ஆகும். கேரளத்திலும் (1.03%) தமிழகத்திலும் (1.07%) குறைவாகவே உள்ளனர். 2007 ஆம் ஆண்டு குடிமதிப்பு இந்தியாவில் 27 மாநிலங்களில் 577 வகையான பழங்குடியினர் வாழ்வதாகக் கூறுகின்றது. இவற்றுள் "இந்திய மண்ணிற்கே உரிய பூர்விகப் பழங்குடிகளாக 75 வகையானப் பழங்குடிகள் இனங்காணப்பட்டுள்ளனர்"[16] என்று 'பிரமோத் மிஸ்ரா' கூறியதாக சு.சக்திவேல் குறிப்பிடுகின்றார்.

இந்தியப் பழங்குடி மக்கள் இனங்களின் எண்ணிக்கையும் தொகையும் மாநிலங்கள் வாரியாக அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

| **வ.எ.** | **மாநிலங்கள்** | **பழங்குடி எண்ணிக்கை** | **பழங்குடி மக்கள் தொகை** |
|---|---|---|---|
| 1 | அருணாச்சலப் பிரதேசம் | 12 | 5,50,351 |
| 2 | அஸாம் | 14 | 28,74,441 |
| 3 | ஆந்திரப்பிரதேசம் | 33 | 41,99,481 |
| 4 | இமாச்சலப் பிரதேசம் | 8 | 2,18,349 |
| 5 | உத்திரப்பிரதேசம் | 5 | 2,87,901 |
| 6 | ஒரிசா | 62 | 70,32,214 |
| 7 | கர்நாடகம் | 29 | 16,61,775 |
| 8 | குஜராத் | 49 | 19,15,697 |
| 9 | கேரளம் | 54 | 3,64,189 |
| 10 | கோவா | 5 | 376 |
| 11 | சிக்கிம் | 2 | 90,901 |
| 12 | தமிழ்நாடு | 42 | 5,74,194 |
| 13 | திரிபுரா | 19 | 8,53,345 |
| 14 | பீகார் | 30 | 66,16,914 |
| 15 | மகாராஷ்ட்டிரம் மணிப்பூர் | 47 | 73,18,281 |
| 16 | மணிப்பூர் | 29 | 1,53,99,034 |
| 17 | மத்தியப் பிரதேசம் | 46 | 6,32,173 |
| 18 | மிசோரம் | 14 | 6,53,565 |
| 19 | மேற்கு வங்காளம் | 38 | 38,08,740 |

| | | | |
|---|---|---|---|
| 20 | மேகாலயா | 17 | 15,17,927 |
| 21 | ராஜஸ்தான் | 12 | 2,18,369 |
| 22 | ஜம்மு காஷ்மீர் | 8 | - |
| 23 | நாகாலாந்து | 5 | 10,60,822 |
| 24 | அந்தமான் நிக்கோபர் தீவுகள் | 6 | 6,770 |
| 25 | இலட்சத்தீவுகள் | 3 | - |
| 26 | டாமன் மற்றும் டையூ | 5 | 17,724 |
| 27 | தாதர் நாகர் வேலி | 17 | 1,09,380 |
| | | | |

### 3.1.4. தமிழகப் பழங்குடிகள்

இந்தியாவின் கிழக்கு, மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பெரும்பகுதியையும் தன்னுள் கொண்டு இயற்கை வளம் மிகுந்த மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது. கல்வி அறிவில் வளர்ச்சி பெற்றவர்களும், பின் தங்கிய பழங்குடிகளும் இம்மாநிலத்தில் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் மலைப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இப்பழங்குடிகள் தமிழ்ச் சமூகத்தின் பழமையையும் பண்பாட்டின் தொன்மையையும் கொண்டவர்கள். இந்திய அளவிலும் கூட பண்பாடு-நாகரிக வளர்ச்சிக்கும் பழங்குடிகளின் பங்களிப்பு மிகக் கணிசமானது என்று பலரும் கூறியுள்ளனர். இவர்கள் பணம் சார்ந்த பொருளாதாரத்தை அதிமாகப் பயன்படுத்துவதில்லை. தங்களுக்கெனத் தனி மொழியும், குடும்பம் மற்றும் சமூகப் பழக்க வழக்கங்களையும் கொண்டவர்கள்.

பழங்குடி மக்களின் பெரும்பான்மையோருடைய மொழிகள் தமிழருடன் நெருங்கிய தொடர்புடையது என்றும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததென்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். முதன் முதலில் எட்கர் தர்ஸ்டன் என்பவரும் பின்னர் அனந்த கிருஷ்ண அய்யர், முனைவர் அய்யப்பன் போன்றோர் பழங்குடிகளைப் பற்றிய ஆய்வுகள் செய்துள்ளனர். 2001-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தமிழகத்தில் முப்பத்தியாறு வகையான பழங்குடி இனத்தவர் வாழ்ந்து வருவதாகக் கூறுகின்றது. இவர்களின் மொத்த மக்கள் தொகை 6,51,321 ஆகும். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.0% விழுக்காடாகும். தமிழகப் பழங்குடி இனத்தவர்களின் பட்டியல் பின்வருமாறு

3.1.5. **தமிழகத்தில் உள்ள அட்டவணைப் பழங்குடிகள் எண்ணிக்கை**

| **வ.எண்** | **பழங்குடிகள் பெயர்** | **மக்கள் தொகை** | **ஆண்** | **பெண்** |
|---|---|---|---|---|
| 1 | அரநாடன் | 140 | 64 | 76 |
| 2 | அடியன் | 2,230 | 1132 | 1098 |
| 3 | இருளர் | 155,606 | 77,689 | 77917 |
| 4 | ஊராளி | 9,226 | 4675 | 4781 |
| 5 | கணியன் | 1,650 | 832 | 818 |
| 6 | ஏரவள்ளன் | 1,554 | 742 | 812 |
| 7 | கம்மாரா | 593 | 310 | 283 |
| 8 | காட்டு நாயக்கர் | 45,227 | 22754 | 22473 |
| 9 | காணிக்காரர் | 3,698 | 1878 | 1820 |
| 10 | காடர் | 760 | 399 | 361 |
| 11 | குறும்பர் | 5,498 | 2892 | 2606 |
| 12 | குறும்பன் | 24,963 | 12631 | 12332 |
| 13 | குடிமலைக்குடி | 126 | 67 | 59 |
| 14 | குறிச்சான் | 3,168 | 1572 | 1596 |
| 15 | கொச்சுவேலன் | 133 | 73 | 60 |
| 16 | கோத்தர் | 925 | 472 | 453 |
| 17 | கொண்டாரெட்டி | 31,526 | 15800 | 15726 |
| 18 | கொரகா் | 159 | 81 | 78 |
| 19 | தொதா் | 1,560 | 812 | 748 |
| 20 | பளியர் | 3,052 | 1534 | 2518 |
| 21 | பணியர் | 9,121 | 4742 | 4479 |
| 22 | பளியன் | 1,525 | 769 | 756 |
| 23 | சோளகா் | 3,853 | 1953 | 1900 |
| 24 | கொண்ட காபு | 516 | 268 | 248 |
| 25 | மகாமலசர் | 183 | 93 | 90 |
| 26 | மலை அரையன் | 499 | 241 | 258 |
| 27 | மலைக் குறவர் | 18,296 | 9092 | 9204 |
| 28 | மலசர் | 6,043 | 3018 | 3025 |
| 29 | மலைப்பண்டாரம் | 3,156 | 1520 | 1636 |

| | | | | |
|---|---|---|---|---|
| 30 | மலையாளி | 310,042 | 156329 | 153713 |
| 31 | மலைவேடன் | 6,411 | 3212 | 3199 |
| 32 | மன்னான் | 82 | 46 | 36 |
| 33 | முதுவர் | 391 | 175 | 216 |
| 34 | தோடர் | 874 | 434 | 440 |
| 35 | மலைக் கண்டி | 464 | 233 | 231 |
| 36 | முடுகர் | 1,297 | 668 | 629 |

2001-ஆம் ஆண்டின் குடிமதிப்பின்படி தமிழகப் பழங்குடி மக்களில் 84.6% பேர் ஊரகப் பகுதிகளிலும் 15.5% பேர் நகர்புறங்களிலும் வாழ்ந்தனர். இவர்களில் குறைவான மக்களே கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். கடந்த காலத்தில் கல்வியறிவு பெற்றவர்களின் அளவைப் பார்க்கும் போது 1981-இல் 20.45% ஆகவும், 1991-இல் 27.9% ஆகவும் இருந்துள்ளனர். 2001-ஆம் ஆண்டு குடிமதிப்பின் படி தமிழகப் பகுதிகளில் அதிகம் கல்வியறிவு பெற்ற பழங்குடிகளாகக் 'கொண்டாரெட்டிகள்' காணப்படுகின்றனர். 78.2%. இவர்களுக்கு அடுத்த நிலையில் குறும்பர்கள் (61.4%) உள்ளனர்.

"பழங்குடி இன மக்களின் ஆண் பெண் விகிதாச்சாரத்தைப் பார்க்கும் போது 2001-இன் கணக்கெடுப்பின்படி 1000 ஆண்களுக்கு 980 பெண்கள் இருந்துள்ளனர். 1991 இல் 1000-க்கு 960 பெண்களே இருந்துள்ளனர்"[17]. கடந்த பத்து ஆண்டுகளில் சற்று வளர்ச்சி அடைந்துள்ளதைக் களப்பணியின் போது அறிய முடிந்தது.

தமிழகப் பழங்கடிகளில் மிகுதியான எண்ணிக்கையில் இருப்பவர்கள் மலையாளி இனப்பழங்குடியினர் ஆவர். (மலையில் வாழ்வதால் மலையாளி, கேரள மக்களுக்கும் இவர்களுக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை) இவர்கள் கிழக்கு மலைத்தொடர் காடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து இம்மலைப்பகுதிக்குக் குடியேறியவர்கள் என்று இவர்தம் வாய்மொழி வழக்காறுகள் கூறுகின்றன. 2001-ஆம் ஆண்டின் குடிமதிப்பின்படி இவர்களின் எண்ணிக்கை 3,10,042 ஆகும். தமிழகப் பழங்குடிகளின் மொத்த மக்கள் தொகையில் மலையாளிகள் மட்டும் 47.6% ஆக உள்ளனர்.

3.1.5.1. **மலையாளி - பெயர்க் காரணம்**

"மலையாளி என்பதற்கு மலைகளில் வாழ்பவர்கள் எனப் பொருள்படும்"[18] **'மார்டன் வைப்பிரட்'** என்பவர் கொலம்பிய பல்கலைக் கழகத்தில் வெளியிட்ட ஒரு நூலில்

“மலையாளி’ எனும் சொல் தற்போது பல்வேறு விதமான பொருள்களில் குறிப்பிடப்படுகின்றது. சமுதாயத்தின் அழுத்தமான காரணிகள் அதன் பொருளை மாற்றிவிட்டன. மலையாளி என்பதற்குச் ‘சமுதாயம்’ என்பதும் பொதுவான எல்லைக்குட்பட்டுப் பொது அரசாங்கத்தின் கீழ் வாழ்பவர்கள் என்பதும் பொருளாகும்”[19] என்று குறிப்பிடுகின்றார்.

‘மலையாளிகள்’ என்பது பேச்சு வழக்குச் சொல். ‘மலையன்’, ‘மலையமான்’, ‘மலையர்’ என்பது இலக்கிய வழக்குச் சொல். சங்கக் காலக் குறிஞ்சி நிலத் தலைவர்களுக்கு ‘மலையன்’, ‘மலையமான்’, ‘மலையர்’ என்ற பெயர்கள் இருந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழி அறிகின்றோம். (எ.கா. மலையமான் திருமுடிக்காரி, கொல்லி மலையாளர்)

### 3.1.5.2. இலக்கியச் சான்றுகள்

தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு உரையெழுதிய இளம்பூரணர் குறிஞ்சித் திணைக்கு எடுத்துக்காட்டுச் செய்யுள் கூறுமிடத்து எடுத்துக்காட்டிய செய்யுளில்,

“----------- வெள்வேற்
களிறு கொழுதானைக் கழறொடி மலையன்”

என்று வருகின்றது. (தொல். பொருள், அகத்)

“முதுக்குறைத் தனளே முதுக்குறைத் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முல்லையும் வாரா முதுக் குறைந்தனளே”
(மேலது, ப.14)

என்ற செய்யுளிலும் மலையன் என்ற சொல் பயின்று வருவதைப் பார்க்கின்றோம்.

மேற்கண்ட இரு செய்யுள் வரிகளிலும் குறிஞ்சி நிலத் தலைவனைக் குறிக்க ‘மலையன்’ என்ற சொல் இடம் பெறுவதைக் காணலாம். மேலும், பண்டைக் காலத்தில் மலை நாட்டை ஆண்ட சேரர்களை ‘மலையன்’ என்று அழைத்திருக்கிறார்கள் என்பதையும் பழந்தமிழ் இலக்கியங்கள் வழி அறிகின்றோம். சேரர் குடியின் ஒழுகலாற்றின்படி இவர்கள் ‘மலையர்’ என்று அழைக்கப்பெற்றனர். பிற்காலத்தில் இவர்களே மலையமான்கள் ஆயினர். ஆகவே ‘மலையர்’ ‘மலையமான்’ என்பதே காலப்போக்கில் ‘மலையாளி’ என்றும் மருவி வழங்கப் பட்டிருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

மலையாளி என்றால் ‘மலையை ஆள்பவன்’ என்பது பொருள். முன்பு ஒரு காலத்தில் பாண்டிய மன்னன் படையில் இருந்த இவர்களின் முன்னோர்கள், போருக்கு அஞ்சி காஞ்சியில் இருந்து நாட்டை விட்டு வந்துள்ளனர். அவ்வாறு வந்த இவர்களின் முன்னோர்கள் பல்வேறு மலைகளில் தஞ்சமடைந்துள்ளனர். பின்பு இம்மக்களிடம் மலையை ஆளும்படியாக நியமனம் செய்து விட்டுச் சென்றதால் தங்களுக்கு மலையாளி என்ற பட்டப் பெயர் கிட்டியதாகவும் கூறுகின்றார்.

இவர்களிடம் இன்றும் சேர, சோழ, பாண்டிய மன்னர்களிடமிருந்த பஞ்சாயத்து முறைகளை கடைப்பிடித்து வருவதைக் காணாமுடிகிறது. இலக்கியச் சான்றுகள் ஒரு புறமிருக்க, கள ஆய்வில் கிடைத்த செய்திகளும் மேற்கூறிய கருத்துக்கு அரண் சேர்ப்பதாக உள்ளது. சவ்வாது மலைப் பகுதியில் வாழும் மலையாளிகள் “நாங்க மொதல்ல மலையிலதான் இருந்தோம். அதனாலதான் எங்கள மலையாளத்தான், மலையான், மலைக்காரன், மலைநாட்டான் என்று சமவெளிப் பகுதி மக்கள் சொல்லுறாங்க’ என்று கூறுகின்றார்கள்”. இக்கூற்றினையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையிலும் சில தரவுகள் கிடைக்கின்றன. அவை,

### 3.1.5.3. மலையாளிகளின் பூர்விகம் பற்றிய கதை

சவ்வாது மலை மலையாளிகள் எந்த நூற்றாண்டில் குடியேறினர் என்று அறுதியிட்டுக் கூற முடியவில்லை. இதற்கு எவ்வித சான்றாதாரங்களும் இல்லை. ஆனால், அவர்களுடைய இனவரலாறு குறித்த செய்திகள் வரலாற்று நாட்டார் கதைகள் வழி ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அறிவுறுத்தப்பட்டு வந்துள்ளன. இருப்பினும் இவர்களுள் சிலர் மட்டுமே தங்களுடைய மூதாதையர் பற்றிய வரலாற்றுச் செய்திகளைச் சொல்ல வல்லவராக இருக்கின்றனர். இக்கதைகளின் வழி அவர்களுடைய இனவரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய இயலும்.

சவ்வாது மலை மலையாளிகளின் வரலாற்றைக் குறித்துப் பேசும் ஏழு நாட்டார் கதைகள் ஆய்வாளரால் திரட்டப்பட்டன. இந்த ஏழு கதைகளும் கூறும் செய்திகளே ஆய்வாளரின் மீட்ருவாக்க முயற்சிக்குக் களமாக அமைகின்றன. இன்றளவும் நிலவி வரும் மலையாளிகளின் பண்பாட்டு எச்சங்களும், தொல்பொருள் சான்றுகளும், நாட்டார் கதைகள் கூறும் செய்திகளை உறுதிப்படுத்துகின்றன.

மலையாளிகளுக்குக் ‘காராளக் கவுண்டர்’, ‘வெள்ளாளக் கவுண்டர்’ என இரு வேறு பெயர்களும் கூறப்படுகின்றன. வெள்ளாளக் கவுண்டர்களின் குலதெய்வம் ‘கரிராமன்’ என்னும் கரிவரதராசப் பெருமாள் என்பதாகும். இத்தெய்வத்தை ‘இருளர்’ இனப் பூசாரிகள் திருட்டுத்தனமாகத் தூக்கிச் சென்றதை, வெள்ளாளனின் கனவில் சாமி தெரிவித்துள்ளது. பின்னர் வெள்ளாளர்கள் ஒன்று கூடி இறைவனை மீட்டுவர தகுந்த இறைவனருள் பெற்று,

உற்சவரை எடுத்துச் சென்ற பூசாரிகளைப் பின்தொடர்ந்தனர். அவ்வாறு புறப்படும்போது தங்களின் வீட்டில் நல்விளக்கேற்று மலர் தூவி இறைவனை வழிப்பட்டுத் தங்கள் மனைவியாரிடம் எங்களுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் நல் விளக்கு அணையும், நிறைகுடம் குறையும், பூ வாடும் எனச் சில சகுன நிகழ்வை கூறிச் சென்றனர். இவர்களுடன் ஒரு நாயும் புறப்பட்டது. செல்லும் வழியின் குறுக்கே பாலாற்றில் வெள்ளம் பெருகி வரவே, நாய் கரையைக் கடக்க முடியாமல் வீட்டிற்குத் திரும்பியது. நாய் மட்டும் திரும்பி வரக்கண்ட அவ்வினப் பெண்கள் தங்களின் கணவன்மார் இறந்துவிட்டதாகக் கருதி இறந்தவர்களுக்கான ஈமச்சடங்குகளைச் செய்துவிடுகின்றனர். பின்னர் வெள்ளாளர்கள் பூசாரிகளிடம் சண்டையிட்டுத் தெய்வமான கரிவரதராச பெருமாளை மீட்டு காஞ்சிபுரம் திரும்பினர். இங்கு இறந்தவர்களுக்கான ஈமச்சடங்கினைச் இவர்களின் மனைவியர் செய்துவிட்டமையால், அவர்கள் அவ்வினத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டவர்களாக ஆக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் சவ்வாது மலைக்குச் சென்று இருளர் பூசாரிகளின் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு அம்மலையிலே வாழ்ந்து வந்தனர் என்று முதல் கதைக் கூறுகின்றது.

“இரண்டாம் கதை ‘கங்குண்டியைச்’ சேர்ந்த வேடுவர்கள் ஏழு பேர் காஞ்சிபுரத்திற்குச் சென்று அங்கிருந்த வேளாளர் இனத்தவரிடம் தங்களுக்குப் பெண் கொடுக்குமாறு கேட்டனர். வேளாளர்கள் பெண் கொடுக்க மறுத்ததுமில்லாமல் அவர்களைப் பார்த்து ஏழனமாகச் சிரித்துள்ளனர். அதனால் சினம் கொண்ட வேடுவர்கள் திரும்பிச் செல்லும் பொழுது ஏழு வேளாளர் இனக் கன்னிப் பெண்களைக் கடத்திக் கொண்டு தம் இருப்பிடமான மலைப்பகுதிக்குச் சென்று விட்டனர். வேளாளர் இன ஆண்கள் ஏழுபேர் ஏழு நாய்களுடன் அப்பெண்களை மீட்டுவரப் புறப்பட்டனர். புறப்படும் முன் நாங்கள் வராமல் நாய்கள் மட்டும் திரும்ப வந்தால் தாங்கள் இறந்ததாக எண்ணி இறந்தவர்கான சடங்கினைச் செய்து விடுமாறுக் கூறிச் சென்றனர். இவர்கள் செல்லும் வழியின் குறுக்கே பாலாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஒடவே நாய்கள் கரையைக் கடக்க முடியாமல் வீட்டிற்குத் திரும்பியது. நாய்கள் மட்டும் திரும்பிவரக் கண்ட இவ்வின பெண்கள் தங்களின் கணவன்மார் இறந்துவிட்டதாகக் கருதி இறந்தவர்களுக்கான ஈமச்சடங்கினைச் செய்து விட்டனர். இந்தச் செய்தி சுவாமி மூலமாக வேளாளர்களுக்குத் தெரியவருகின்றது. ஆனாலும் தங்களின் இனப் பெண்களை விட்டுச் செல்ல மனமில்லாமல் பின் தொடர்ந்து வேடர்களுடன் போர் செய்து அவர்களைக் கொன்றுவிட்டு வெற்றியுடன் அச்சகோதரர்கள் காஞ்சிபுரம் திரும்பி வந்தனர். இங்கு இவர்கள் இறந்ததற்கான ஈமச்சடங்குகள் செய்துவிட்டமையால் உறவினர்கள் அவர்களைத் தம்முடன் சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டனர். எனவே, அந்த ஏழுபேரும் மலைப்பகுதிக்குச் சென்று இறந்த வேடுவர்களின் பெண்களை மணந்துக் கொண்டு வாழ்ந்தனர்”[20] என்கிறது.

இரண்டாம் கதையின் போக்கும், முதலாம் கதையின் போக்கினைப் போன்றே இருக்கின்றது. எனினும் வேடுவர்களை வெற்றிக் கொள்ள சகோதரர்கள் புறப்பட்ட பொழுது தம் உறவினர்களிடம் 'நாய்கள் மட்டும் திரும்பினால், நாங்கள் இறந்துவிட்டதாகக் கருதி எங்களுக்குரிய ஈமச்சடங்குகளைச் செய்துவிடுங்கள்' என்று அவர்களே சொல்லிச் சென்றதாக ஒரு செய்தியையும் மிகையாகத் தன்னுள் கொண்டுள்ளது.

மூன்றாம் கதை, புனித நகரமான காஞ்சிபுரத்திலிருந்து முகமதியப் படையெடுப்புகளிலிருந்து, தங்களின் கலாச்சாரத்தையும் சமயத்தையும் பாதுகாக்கும் பொருட்டு மலைப்பகுதிக்கு வந்தனர். காஞ்சிபுரத்திலிருந்து குடிபெயர்ந்து மூன்று சகோதரர்கள் வந்ததாகவும், மூத்த சகோதரன் கல்வராயன் மலையிலும் இரண்டாம் சகோதரன் சவ்வாது மலையிலும், இளைய சகோதரன் பச்ச மலையிலும் குடியேறினார்கள் என்றும் இவர்களின் தலைமையில் வந்தவர்களே இம்மலையாளிகள். இவர்கள் முறையே பெரியண்ணன், நடு அண்ணன், சின்ன அண்ணன் என அழைக்கப்பட்டனர் என்று கூறுகிறது.

இக்கதைத் தங்களின் சமயத்தையும், பண்பாட்டையும், காப்பாற்றிக் கொள்ளவும், அமைதியான வாழ்க்கையைத் தேடிக்கொள்ளவும் மலையில் குடியேறியவர்கள் இப்பழங்குடிகள். முகமதிய படையெடுப்பில் இருந்து தங்களைக் காத்துக்கொள்ள மலைப்பகுதியே பாதுகாப்பான அரணாக இருந்திருக்க வேண்டும். பின்னர் இதை விடப் பாதுகாப்பான மிகச் சிறந்த இடம் வேறு இல்லை என்று எண்ணி அங்கேயே வாழ்ந்து வந்தவர்கள் இம்மலையாளிகள் என்று கருதவும் இடமுண்டு.

நான்காம் கதை 'அந்நாளில் காஞ்சிபுரத்தை ஆண்ட மன்னனின் தம்பி தன் அண்ணனுடன் ஏற்பட்ட மனத்தாங்களின் காரணமாகத் தம் மூன்று மகன்களுடனும், ஒரு மகளுடனும் அந்நகரை விட்டு வெளியேறி மலைப்பகுதிக்கு வந்துள்ளனர். அம்மலைப்பகுதியை அப்பொழுது ஆண்டுகொண்டிருந்த வேடுவரும், வேளாளரும் இப்புதியவர்களின் வருகையை எதிர்த்தனர். எனினும் வந்தேறியவர்களே இறுதியில் வெற்றி பெற்றனர். பின்னர் மூத்தவன் கல்வராயன் மலையையும், இரண்டாமவன் சவ்வாது மலையையும், இளையவன் கொல்லி மலையையும் இருப்பிடமாகக் கொண்டு வாழத் தொடங்கினர்' என்கிறது.

வேடுவரும், வேளாளரும் மலைப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்தனர் என்பது பெரும்பாலான கதைகளில் காணப்பெறும். 'வேடுவர்களை அழித்துப் பின் குடியேறியவர்களே வேளாளர்கள்' என்னும் செய்திக்குப் புறம்பாக உள்ளது. அப்படியே இக்கதைக் கூறும் செய்தியே உண்மையானதாக இருக்கும் என்று கொண்டாலும் நான்கு கீழ்நாட்டவர் இவ்விரு இனக்குழுவினரை வென்றனர் என்பது நம்பும் படியாக இல்லை. இக்கதையில் நெடிய மலைத்தொடர் முழுமையும் தனிமனித சொத்தாக இருந்தது என்பதும்

நம்பும் படியாக இல்லை. மேலும், செய்திகள் எதுவும் விளக்கமாக இக்கதையில் சுட்டப்பெறவும் இல்லை.

ஐந்தாம் கதை 'பெரியண்ணன், நடண்ணன், சின்னண்ணன் என்ற மூன்று சகோதரர்கள் தம் வேட்டை நாய்களுடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றனர். அப்பொழுது மழை இரு நாட்கள் இடைவிடாமல் பெய்தது; இதனால் அவர்களால் தம் இருப்பிடத்திற்குத் திரும்ப இயலவில்லை; ஆயினும் அவர்களுடைய நாய்கள் மட்டும் எப்படியோ ஊர் திரும்பியது. தம் கணவன்மார் வராமல் அவர்களுடைய நாய்கள் மட்டும் வந்தமையால்; அவர்கள் மூவரும் இறந்து விட்டதாகக் கருதி மனைவியர் வீட்டுக்குள்ளிருந்து தமக்குத் தாமே தீ வைத்துக் கொண்டு இறந்து விட்டனர். மழை நின்றதற்குப் பின்னர் இருப்பிடம் திரும்பிய சகோதரர்கள் நடந்தது அறிந்து துயரம் மிகக் கொண்டனர். பின்னர் தம்மைத்தாமே தேற்றிக் கொண்டு மறுமணம் புரிந்து கொண்டனர். மூன்று பேரும் மூன்று வெவ்வேறு இனப் பெண்களுடன் மண உறவினை ஏற்படுத்திக் கொண்டதாகக் இக்கதை முடிகிறது'. இதனாலேயே, கல்வராயன் மலையாளிகள், பச்சை மலையாளிகள், சவ்வாது மலையாளிகள் என வேறுபடுத்திச் சொல்லும் படியான மூன்று தனித்தனி இனக் குழுக்கள் தோன்றின எனும் குறிப்பினை இக்கதை உணர்த்துவதைக் காணலாம்.

ஆறாவது கதை 'மூன்று சகோதரர்கள் வேட்டையாடச் சென்றனர். வேட்டையில் கிடைத்த மானின் இறைச்சியைப் பகிர்ந்து கொள்ளும்பொழுது, அவர்களுள் ஒருவன் நாயுடன் வந்திருந்ததனால் தன்னுடைய நாய்க்காகவும், தனக்கு இன்னுமொரு பங்கு தரவேண்டும் என்று கேட்டான். மற்ற இருவரும் மறுக்கவே அவர்களை விட்டுப் பிரிந்து அவன் சென்றான். அவ்வாறு பிரிந்து சென்றவன், காட்டில் அலைந்து திரிந்து இரவில் குளிரில் நடுங்கிக்கொண்டு ஒரு நெடிய மரத்தின் கீழ் ஒண்டினான். அம்மரத்தின் மீது வீடு அமைத்து வாழ்ந்து வந்த வேடுவத் தம்பதிகள் அவனை மேலே வரவழைத்து உணவும் உறைவிடமும் கொடுத்தனர். உணவிற்குப் பின் அனைவரும் அடுத்தடுத்துப் படுத்துறங்கத் தொடங்கினர். ஆயினும் உறங்காமல் விழித்துக் கொண்டிருந்த புதியவன் வேடுவ இனப் பெண்ணிற்கு இந்தப்பக்கமாக வந்து படுத்துக்கொண்டு அவளை அணைத்தான். தன்னை அவ்வாறு வலிந்து அணைத்தவன் புதியவனே என்று வேடுவ இனப்பெண் உணர்ந்து கொண்டாலும், அந்தப் பக்கமாகப் படுத்திருந்த தன் கணவனான வேடுவனையே புதியவன் என்று தவறாக எண்ணிக் கொண்டு காலால் உதைத்துத் தள்ளி விட்டாள். இதனால் வேடுவன் படுகாயமுற்று இறந்தான். பின்னர் உண்மை தெரிந்துகொண்ட வேடுவ இனப்பெண் தன் கணவனையே கொன்றுவிட்டதனால் வேறு வழியில்லாமல் அந்தப் புதியவனையே கணவனாக ஏற்றுக்கொண்டாள் என்கிறது'.

இக்கதை, பலவகையாலும் குறைமலிந்து முதலில் மற்ற சகோதரர்கள் என்ன ஆனார்கள் என்ற கேள்விக்கு இக்கதையில் விடையில்லை. இரண்டாவதாக மற்ற

வேடுவர்கள் எவ்வாறு இவர்களைத் தங்கள் சமூகத்தில் ஏற்றுக்கொண்டனர் என்ற குறிப்பு இதில் இல்லை. அந்தக் காடு முழுமைக்குமே ஒரேயொரு வேடுவக் குடும்பமே இருந்தது என்பது போல் தவறான ஒரு கருத்தை இக்கதைக் காட்டி நிற்கிறது. இக்காரணங்களால் இக்கதையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் வேடுவர் கீழ் நாட்டார் உறவுக்கலப்பினை அடிப்படையாகக் காட்டுவதனால் இக்கதையையும் கணக்கில் கொள்வதில் தவறேதுமில்லை.

ஏழாம் கதை ‘மலையாளிகளின் தந்தைவழி மூதாதையர், வேளாண் தொழிலாற்றிய காராள, வேளாளர் வழியினர் என்றும், முகமதியர் ஆட்சி தென்னிந்தியாவில் மேலோங்கிய போது, அதனால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதி மக்கள் கூட்டம் காஞ்சிபுரத்திலிருந்து பாலாற்றைக் கடந்து சவ்வாது மலை, போன்ற ஏனைய மலைக் குன்றுகளுக்குச் சென்று குடியேறியிருக்கிறார்கள். போரின் காரணமாகக் குடியேறியவர்கள் அங்குள்ள வேடர்களை வென்று அவ்வினப் பெண்களுடன் வாழ்ந்திருக்கிறார்கள் என்றும் இவர்களின் முதன்மைத் தொழில் வேளாண்மை என்பதையும் சில கதைக் குறிப்புக்களால் காணமுடிகின்றன.

‘ஒரு சமயம் காஞ்சிபுரத்தில் பஞ்சம் ஏற்பட்ட பொழுது அங்கிருந்து பிழைப்பதற்காக மூன்று சகோதரர்கள் தங்கள் தங்கையுடன் புறப்பட்டனர். இரவு வந்ததும் பாதி வழியில் அவர்கள் தங்கினர். பசிக்கு உணவின்றித் தவித்த அச்சகோதரர்கள் ஒரு தொட்டி (சுரைக் குடுக்கை) கஞ்சிக்காகத் தங்கையை அம்மலையை ஆண்டு கொண்டிருந்த தொட்டியரசனுக்குக் கொடுத்து விட்டார்கள். பசியாறிய பின்னர் உணவுக்காகக் தங்கையைக் கொடுத்து விட்டோமே என்று மூவரும் ஒருவரை ஒருவர் குறைக் கூறிக் கொண்டனர். இதனால் ஏற்பட்ட மனக்கசப்பில் ஆளுக்கொரு திசையில் பிரிந்து சென்றனர். அதன் படி முதலாம்மவன் கல்வராயன் மலையிலும், இரண்டாமவன் பச்சை மலையிலும், மூன்றாமவன் சவ்வாது மலையிலும் குடியேறினர் என்பர்.

மலையாளிகளின் பூர்வீகம் தொடர்பான கதைகள் பல இருப்பினும் அனைத்துக் கதைகளும் இவர்களின் பூர்வீகம் காஞ்சிபுரம் என்றும், முகமதியப் படையெடுப்புகளுக்குப் பயந்து தங்களின் கடவுளான கரிராமனின் ஆணைப்படி இம்மலைத் தொடர்களில் குடிப்பெயர்ந்தனர் என்பதையும் அறியமுடிகின்றது.

### 3.1.5.4. கதைகளின் வழி கண்ட முடிவுகள்

“நாட்டார் கதைகளில் பொதுவாகத் திரும்பத் திரும்பப் பேசும் செய்திகளையே! மையக்கருத்து என்பார், நாட்டார் வழக்காற்றியலார். மையக் கருத்துக்களே முடிவுகளை வரையறுப்பதில் துணை செய்வன”[21]. அந்த வகையில் மேற்கண்ட ஏழு கதைகளின் வழி பெறப்பட்ட முடிவுகள் பின்வறுமாறு அமைகின்றது.

வேடுவர் கிழக்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளின் முதுகுடிகள். காராளர், வேளாளர் எனும் கீழ்நாட்டார் காஞ்சிபுரத்திலிருந்து அப்பகுதிக்கு வந்தேறியவர்களாவர் அந்த வந்தேறியவர்களே வேடுவர் இன ஆண்களை அழித்துப் பின்னர் வேடுவ இனப் பெண்களை மணம் புரிந்து மலையாளிகள் எனும் ஒரு புதிய இனக்குழுவை உருவாக்கினர்.

### 3.1.5.5. பண்பாட்டுச் சான்றுகள்

நாட்டார் கதைகள் கூறும் முடிவுகளை அறிதிட்டுக் கூற பல்வேறு பண்பாட்டுச் சான்றுகளும், தொல்லியல் சான்றுகளும் இருக்கின்றன. அவை குறித்து இங்கு சற்று விளக்கமாகக் காண்போம்.

தொல்பண்பாடு குறித்த செய்திகளை வெளிப்படையாகத் தெரிவிக்கா விடினும், சிற்சில செய்திகளைக் கொண்டிருக்கும் பண்பாட்டுக் கூறுகளைச் சவ்வாது மலை மலையாளிகள் பண்பாட்டில் இன்றும் காண முடிகின்றன. பண்பாட்டுச் சான்றுகள் என இங்குச் சுட்டப் பெறுபவை இவர்களின் அன்றாட வாழ்வில் இலைமறைக் காய்போல் நின்று விளங்கும் பண்பாட்டு எச்சங்களே.

மணப்பந்தலில் அம்மி, அரசணைக்கு அருகில் ஓர் இரும்பு ஆணி நடப்பட்டுள்ளது. தங்களால் அழிக்கப் பட்ட வேடுவரின் ஆவி திருமணத்தைத் தடை செய்யாமல் இருப்பதற்காகவே நடப்பட்டுள்ளது என்கின்றனர். திருமணத்தின்போது மணமகன் கையில் வால் ஒன்றை வைத்துக் கொண்டே இருக்கின்றான். இது வேடுவர்களை வெற்றிப் பெற்று வெற்றியின் எச்சமாகவும் இன்றளவும் பயன்படுத்தி வருகின்றனர். மணமகன் தாலியைக் கட்டிய பிறகு, மணவீட்டார் வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுடுகின்றனர். இது வேடுவரின் வீழ்ச்சியையும், வேளாளர்களின் வெற்றியையும் நினைவுறுத்தும் பண்பாட்டு எச்சமாகும்.

பண்பாட்டு ஒப்பாய்வின் வழியும் ஒரு சான்று கிடைக்கின்றது. கல்வராயன் மலையாளி இன மணப்பெண்கள், மணம் நிறைவுற்ற பின் மணப்பந்தலைச் சுற்றும் பொழுது ‘வேடனெ கைவுட்டு காராளனெ கைப்புடிச்சென்’ என்று கூறிக்கொண்டே சுற்றுகின்றனர். இது வேடுவர் - காராள வேளாளர் உறவில் மலையாளிகள் என்றும் புது இனக்குழு தோன்றியது எனும் கருத்திற்குச் சரியான அரணாக இருக்கிறது. மேலும், ஆற்றங்கரையை அடையும் பொழுது மேற்கூறிய சொற்றொடரைக் கூறி ஆற்று நீரில் சிறிது அரிசியைப் போடுகின்றனர். இறந்தவர்களுக்கு அரிசி போடும் வாய்க்கரிசி போடுதல் எனும் சடங்கினை ஒத்திருக்கின்றது

திருமணச் சடங்கில் மூன்று நிறைசாலை அரசாணைக்கால் அருகில் வைத்து திருமண நிகழ்ச்சியை நடத்துகின்றனர். இஃது மூன்று அண்ணன்களான பெரியண்ணன், நடுஅண்ணன், சின்னண்ணன் ஆகியோறின் பரம்பரையை நினைவுக் கூறும் முகமாக

இன்றும் மூன்று நிறைசாலை திருமணப் பந்தலில் பயன்படுத்தி வரும் பழக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

### 3.1.5.6. தொல்லியல் சான்றுகள்

சவ்வாது மலையில் அமைத்துள்ள பல்வேறு குடியிருப்புகளில் பெரிய அளவு கல்லுரல்கள் தரையொடுத் தரையாகப் பதிக்கப் பெற்ற நிலையில் இன்றும் காணப்படுகின்றன. இவை திணை, சாமை போன்றவற்றை குத்துவதற்கும், மூலிகைகளை அரைப்பதற்கும் வேடுவர்களால் பயன்படுத்தப் பெற்றவை என்கின்றனர் இம்மலையாளிகள். இவைத் தவிர, மிகப் பெரிய அளவிளான ஓரிரு குதிர்கள் மலையாளிகளின் குடியிருப்புக்கு அருகிலும் ஆங்காங்கும் காணப்படுகின்றன. இவை தானியங்களைச் சேமித்து வைப்பதற்கு வேடுவர்கள் பயன்படுத்தியவையே என்று கருத முடிகின்றது.

சவ்வாது மலைப் பகுதியில் ஆங்காங்கே வேடுவர் உருவம் பொறித்த கற்சிலைகள் அழிவுற்ற நிலையில் காணக்கிடைக்கின்றன. இக்கற்சிலைகளுக்கு மலையாளிகள் தங்களின் மூதாதையரின் நினைவாக ஆண்டிற்கு இரு முறை பொங்கல் வைத்து ஆடு, கோழி பலியிட்டு வழிப்பட்டு வருகின்றனர்.

### 3.1.5.7. வரலாற்று நிகழ்வுகள்

திப்புச் சுல்தானின் தந்தையான ஐதரலி ஆட்சியில் ஏற்பட்ட அட்டுழியங்களுக்குப் பயந்து, மக்கள் காடுகளிலும் மலைகளிலும் ஒளிந்து வாழ்ந்த செய்தியைத் தமிழக வரலாற்றினைப் படிப்பதின் மூலம் அறிந்து கொள்கின்றோம். “ஐதரலி 1780-ஆம் ஆண்டு, ஜுலை மாதம் 90,000 காலாள்களுடனும் 100 பீரங்கிகளுடனும் மைசூர்ப் பீடபூமியினின்றும் வந்து செங்கண்மாக் கணவாயின் வழியாகக் கருநாடகச் சமவெளியின் மேல் இறங்கினான். ஆங்கிலேயக் கம்பெனின் மேல் அவன் கொண்டிருந்த மாபெருஞ் சினமானது ஊழித் தீயாக மாறிக் கருநாடகத்தைப் பற்றிக் கொண்டது. ஐதரின் சேனைகள் நாடெங்கும் தீ மூட்டின. தம் வழியில் நேரிட்ட ஊர்கள் அத்தனையையும் சூரையாடின. குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட மக்கள் அனைவரையும் படுகொலை செய்தன. ஐதரலியின் வழியில் சிக்குண்ட ஊர்கள், உயிர்கள் யாவும் படுசூரனமாகிக் காற்றில் பறந்தன. அக்கம் பக்கத்து ஊர்களில் வாழ்ந்திருந்த மக்கள் பீதியினால் வீட்டையும் நாட்டையும் கைவிட்டுக் காடுகளிலும் மலைகளிலும் ஓடி மறைந்தார்கள்”[22].

என்று ஐதரலி நடத்திய போர்ச் சம்பவங்களைப் பற்றி விளக்கமாகவே எடுத்துக்காட்டுகின்றார் முனைவர் கே.கே.பிள்ளை. அவர் கூறுகின்ற வரலாற்றுச் சம்பவத்தின் அடிப்படையில் பார்க்கின்றபோதும், கள ஆய்வுச் செய்தியின் அடிப்படையில் பார்க்கின்றபோதும் நமக்குச் சில முடிவுகள் புலப்படுகின்றன. ஐதரலி காலத்துப் போர்களின்போதும், அதற்கு முன்னதாக நடந்த நாயக்கர் காலத்து மூக்கறுப்புப்

போர்களின்போதும், மக்கள் பலவகைத் துன்பங்களைச் சந்தித்திருக்கின்றார்கள். இவை தவிர, கடும் வறட்சியின் கோரத் தாண்டவங்களில் சிக்கித் தவித்த நிலையிலும் நாட்டுக் குடிமக்கள் பற்பல இன்னல்களுக்கு ஆளாகியிருக்கின்றார்கள். இத்தகைய போர் சூழ்நிலைகளின்போதும், கடும் வரட்சி ஏற்பட்டபோதும் மக்கள் தம் சொந்த வாழ்விடங்களை விட்டுவிட்டு மலைகளுக்கும், காடுகளுக்கும் சென்று தங்கி வாழ்க்கையை மேற்கொண்டு இருப்பார்கள் என்று ஊகிக்க முடிகின்றது.

எவ்வகையிலும் தங்களைக் காத்துக்கொள்ள வழித்தெரியாமல் காடுகளிலும், மலைகளிலும் ஒதுங்கிய மக்கள் அப்பகுதியில் ஏற்கனவே வாழ்ந்து கொண்டிருந்த சில குடிகளோடுக் கலந்து பழகியிருக்கலாம். எனவே இவ்விரு இனத்தவர்களின் வாரிசுகளாக இன்றைய பெரும்பாலான பழங்குடி மக்கள் இருப்பதற்கும் வாய்ப்புண்டு. இத்தகைய கருத்திற்கு மேலும் வலு சேர்ப்பது போல மானிடவியல் அறிஞர் பிலோ இருதயநாத் அவர்களும் ஒரு கருத்தைக் கூறியிருக்கின்றார்.

‘‘கொங்கு நாட்டு மலைகளில் வாழும் பழங்குடி மக்கள் அனைவரும் பகை அரசனுக்கு அஞ்சிப் பல்லாண்டுகளுக்கு முன்பே இம்மலையில் குடியேறிய தமிழ்மக்களே என்பதை உணரலாம்’’[23] என்று கூறுகின்றார். இக்கூற்றும் இங்கு கவனிக்க தக்கது.

‘‘தொன்மையான காலத்தில் மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் சென்றமைக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அதாவது கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலம் தேடிச் செல்லல், உணவுப் பஞ்சத்தின் காரணமாக வேறிடம் செல்லல், தொற்று நோய்க்குப் பயந்து கிளம்பிச் செல்லல் போன்ற காரணங்கள் முக்கியமானவை என்றும், ஆனால் மன்னராட்சி முறைக்கு நன்கு வேரூன்றிய காலக்கட்டத்தில் மக்களுடைய குடிபெயர்வுக்கு அரசியல் பிரச்சனைகளும் காரணங்களாக அமைகின்றன. பொதுவாக மனிதன் குடிபெயர்வது உயிர் வாழ்வதற்கும், வாழ்க்கை வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்கும் தான்’’[24] என்கிறார் முருகேசபாண்டியன்.

### 3.1.5.8. பஞ்சமும் குடிபெயர்வும்

உணவு, குடிநீர் இல்லாமையின் காரணமாக இடம் விட்டு பெயர்ந்து செல்லுதல் மிகப் பழங்காலத்தில் இருந்தே எல்லாப் பழங்குடிகளிடமும் வழக்கில் உள்ளதாகும். மலையாளி இனப் பழங்குடி மக்கள் காஞ்சிபுரத்தில் தோன்றிய பஞ்சத்தின் காரணமாகத் சவ்வாது மலைக்குப் குடிபெயர்ந்து வந்திருக்க வேண்டும் என்றும் ஒரு சில கதைகளில் கூறப்படுகின்றன. மேற்கண்ட சான்றுகளின்படி மலையாளி இன பழங்குடி மக்கள் குடி பெயர்வுக்கு மூன்று முக்கியக் காரணங்களைக் குறிப்பிடலாம். அவை பின்வருமாறு

1. பல்லவர்கள் ஆட்சிக் காலத்தில் அரசியல் காரணமாகக் குடிபெயர்ந்து வந்தவர்கள்

2. முகமதியர் படையெடுப்பின் போது கலாச்சாரச் சீரழிவின் காரணமாகக் குடிபெயர்ந்து வந்தவர்கள்.
3. பஞ்சத்தின் காரணமாகக் குடிபெயர்ந்து வந்தவர்கள்.

இத்தகைய காரணங்களில் ஏதாவது ஒன்றின் காரணமாகத்தான் மலையாளி இனத்தின் ஒரு பிரிவினர் இடம் பெயர்ந்து வந்திருக்க வேண்டும்.

மேற்கண்ட கள ஆய்வுச் செய்திகளின் அடிப்படையில் நோக்கும்போது ஆங்கிலேயர் காலத்திற்கு முன்பாகவே நடந்த போர்களுக்கு அஞ்சி காஞ்சிபுரத்தினின்று கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிக்குக் குடியேறிய 'காராளர்' 'வேளாளர்' இனத்தவர்க்கும், மலையில் முன்னரே வசித்துக் கொண்டிருந்த தொல்குடிகளான வேடுவ இனத்துப் பெண்களுக்கும் இடையே ஏற்பட்ட உறவுக்கலப்பினால் தோன்றிய ஒரு புதிய இனக்குழுவே இன்றைய 'மலையாளிகள்' என்று கருதமுடிகின்றது.

### 3.1.5.9. இருவகை மலையாளிகள்

மலையாளி இனத்தவர்களில் காராளக் கவுண்டர், வெள்ளாளக் கவுண்டர் என்று இருவகைப் பிரிவினர் காணப்படுகின்றனர். இதனையே கோ.கிருட்டினமூர்த்தி அவர்கள், கல்வராயன் மலை மக்கள் வரலாறு என்னும் தமது நூலில் 'மலையாளிகள் காராளர், வெள்ளாளர் என இரு பிரிவுகள் உண்டு. காராளர் என்பது உழுது உண்ணும் தொழிலைச் செய்யும் வேளாளர். கார் அல்லது மேகத்திலிருந்து வரும் நீர் வெள்ளத்தை ஆளுபவர் என்றும் குறிப்பிட்டுச் சொல்கின்றார்'. காராளர் என்ற சொல் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தோரைக் குறிக்கும் ஒரு சொல். பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து இன்றுவரை அச்சொல் அதே பொருளில்தான் வழங்கி வருகிறது. "கார் என்பது கலப்பையின் முனையில் பொருத்தப்பட்டிருக்கும் இரும்பாலான கொழுவைக் குறிக்கும். காராளர் என்றால் கொழுவைப் பயன்படுத்துவதில் வல்லவர்கள் என்று பொருள்"[25]. எனவே, அந்தக் காராளரே கார்காத்தார் எனப்படுவர்.

"வேளாளர்' என்பது வேளாண்மையர், வேள்வியாளர், வெள்ளாளர் எனப் பலப் பெயர்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் வேளாளர் (வேள்+ஆளர்) எனப் பிரிக்கப்பெற்று 'வேள்' என்பதற்குத் தன்னிலம், நன்றி, விருப்பம், ஈகை, சத்தியம் ஆன இவைகளை ஆள்பவர் என்றும், இவைகளையெல்லாம் நன்குடையவர் எனவும் பொருள்படும். மேலும் "மெய்மையுங் கொடையும் வேளாண்மையாகு மென்று"[26] பிங்கல நிகண்டு கூறுகின்றன.

"வெள்ளாளர் என்பது, வெள்ளம்+ஆளர் என்பதில் 'ஆம்' குறைந்து வெள்ளாளராயிற்று எனக் கொள்வாருமுளர். மற்றொன்று வெள்ளமான நீரின் பெருக்கினை

(ஆளர்) கடலிற் செல்லாது, மறுத்து வயலிற் செலுத்தி வளப்படுத்திப் பயன் கொள்பவர் என்றும் கூறலாம். இதன் காரணமாக வேளாளரைத் அந்நிலத்திற்குரியவர்கள் என்ற காரணத்தால் சிற்சில இடங்களிற் காணியாளர், கரையாளர் எனவும் அழைக்கப்படுகிறார்கள்.''[27]. மலையாளிகளும் தாம் வாழும் இடச்சூழலுக்கு ஏற்றவாறு பிரிந்து வாழத் தலைப்பட்டுள்ளனர். கால வழக்கில் இவை இரு பிரிவாக இன்று காணப்படுகிறது. காராளர்கள் வெள்ளாளர்களை விடத் தொழில் திறமைகளில் குறைவுடையவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக வெள்ளாளர்கள், காராளர்களைத் தங்களை விடத் தாழ்ந்தவர்கள் என்று கருதுகின்றார்கள். அதனால் இவர்களுக்குள் கொள்வினைக் கொடுப்பினை இல்லை என்று அறிய முடிகிறது. இவர்கள் தங்களைக் காராளக்கவுண்டர், வெள்ளாளக் கவுண்டர் என்றும் கூறிக்கொள்கின்றனர்.

3.1.5.9.1. **மலையாளிகளைப் பிறர் அழைக்கும் விதம்**

சமவெளிப் பகுதி மக்கள் மலையாளிகளை, 'மலைநாட்டான்', 'மலையாளி', 'காட்டுவாசி' என்று குறிப்பிடுகின்றனர். சிலர் 'மலைக் கவுண்டர்' என்றும், 'மலையான்', 'மலையாளத்தான்' என்றும் அழைப்பதுண்டு. மலையாளிகளின் தலைவனுக்கு 'ஊர் நாட்டார்', 'கவுண்டர்' என்னும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. அந்தப் பெயரை அடியொற்றியே இவ்வினத்தவரை மற்றவர்கள் 'மலைக்கவுண்டர்கள்' என்றும் 'மலை நாட்டார்' என்றும் குறிப்பிடுகின்றனர் என்று அறிய முடிகின்றது.

**3.1.5.9.2. கவுண்டர் சொல்விளக்கம்**

**'கவுண்டர்'** என்ற சொல்லுக்கு வேளாளர் என்ற பொருளையே அபிதான சிந்தாமணி கூறுகின்றது. மலைப்பகுதியில் வாழும் மக்களிடையே 'கவுண்டர்' என்ற சொல் 'கிராமத்தலைவரைக்' குறிப்பதாக உள்ளது. காமிண்டர் என்ற சொல்லே கவுண்டர் என்றாகியது. 'காமிண்டர்' என்பதை கா என்றும், 'மிண்டர்' என்றும் பிரித்துப் பொருள் கூறப்படுகிறது. 'கா' என்றால் காவல் தொழிலைச் செய்தல் என்றும், 'மிண்டர்' என்றால் வலிமையுடையவர் என்றும் பொருள் கொண்டு 'கவுண்டர்' என்பதற்குக் காவல் தொழிலைச் செய்வதில் வல்லமையுடையவர் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

**3.1.5.9.3. மலையாளிகளைக் கவுண்டர் என அழைத்தல்.**

'வேட்டுவர்' என்றால் வேட்டையாடிப் பிழைப்பவர்கள் என்று பொருள். 'வேளாளர்' என்றால் நிலத்தை அண்டிப் பிழைப்பவர்கள் என்று பொருள். தற்போது இரண்டு பிரிவினரும் நிலத்தை அண்டிப் பிழைப்பவர்களாக உள்ளனர். ஆரம்பக்காலத்தில் வேட்டுவர்கள் வேட்டையாடுதலைத் பிழைப்புத் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். காட்டிற்கும் நாட்டிற்கும்

உள்ள வேற்றுமையே வேட்டுவர்க்கும் வேளாளர்களுக்கும் இருந்திருக்க வேண்டும். அதன்பொருட்டு இவ்விரண்டு பிரிவினர்களுக்கும் பகைமை ஏற்பட்டு போர்களில் முடிந்திருக்கின்றன என்று அறிய முடிகிறது. சவ்வாதுமலைப் பகுதிகளில் வசிக்கின்ற மலையாளிகள் தங்களையும் 'கவுண்டர்' என்றே அழைத்துக்கொள்கிறார்கள். கவுண்டர் என்று அழைத்துக் கொள்வதை அவர்கள் பெரும் மதிப்பாகக் கருதுகிறார்கள். மலையாளிகள் வாழ்கின்ற ஊர்களின் தலைவர்களும் கவுண்டர் என்றே அழைக்கப்படுகிறார்கள்.

### 3.1.5.9.4. மலையாளி இனக் குடியிருப்புக்கள்

வெள்ளாளக் கவுண்டர்கள் தாம் வாழும் குடியிருப்புப் பகுதிகளை 'நாடுகள்' எனப்படும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். இந்நாடுகள் ஒவ்வொன்றும் பத்து முதல் இருபது ஊர்கள் வரைக் காணப்படுகின்றன. ஒவ்வொரு ஊரிலும் ஊரின் பரப்பளவுக்கு ஏற்ப 30 குடும்பம் முதல் 200 குடும்பங்கள் வரை வாழ்ந்து வருகின்றனர். வெள்ளாளக் கவுண்டர்கள் இனக்குழு மக்களைப் போன்றே கூடி வாழும் இயல்பு கொண்டவர்களாக இருக்கின்றனர். இவர்கள் வாழும் குடியிருப்புகளைச் சுற்றிலும் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட கற்களால் வேலி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வேலியின் உயரம் ஏறத்தாள மூன்றடி வரை உள்ளது. இது காட்டு விலங்குகளிடமிருந்து இவர்களைப் பாதுகாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் கூடி வாழும் இடத்தை 'ஊடு', (வீடு) 'மந்தை' என்றும் நிலத்தில் இருக்கும் வீட்டைக் 'கொட்டாய்', 'குட்டாய்' என்றும் குறிப்பிடுகின்றனர்.

வீடுகள் தெருக்கள் போன்று வரிசையாக அமைந்துள்ளது. இவற்றின் சுவர் களிமண்ணால் நாண்கு பக்க செவ்வக வடிவில் கட்டப்பட்டுள்ளது. இவ்வீடுகளில் குறுகிய நுழைவு வாயிலைத் தவிர சன்னல்கள் எதுவும் வைக்கப்படவில்லை. காடுகளில் கிடைக்கும் 'மஞ்சம்புல்' என்னும் ஒருவகை புற்களைக் கொண்டு கூரைகள் வேயப்பட்டுள்ளது. ஊரின் நடுவே 'சாவடி' (அ) 'மந்தை' என அழைக்கப்படும் அகலமான பந்தல் அமைக்கப்பட்ட பொது இடம் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளிலும் காணப்படுகின்றது. ஊர்க்கூட்டம், தெருக்கூத்து, கதைக்கூறல், ஆட்டங்கள் போன்றவைகள் இங்குதான் நடைபெருகின்றன. அப்பொழுது 'நெருப்பை' வளர்த்து (அ) தீ மூட்டி அதனைச் சுற்றி அமர்ந்து கொண்டு பேசி, பாடி மகிழும் இடமாகவும் இது அமைந்துள்ளது. மேலும், ஊருக்குப் புதியதாக வரும் உறவினரும், விருந்தினரும் தங்கும் இடமாகவும் சாவடி அமைகிறது.

சாவடிக்கு முன்புறம் ஊர்ப்பட்டிகள் கட்டப்பட்டுள்ளன. இதில் தைமாதம் நிகழும் பொங்களின் போது இவ்வினத்தவர்களின் ஆடு, மாடுகளை அடைத்து வைக்கின்றனர். 'தம்பிரான் வீடு' என்று அழைக்கப்படும் வீடு ஊரின் கோவிலாக அமைந்துள்ளது. இதன் அமைப்பு இவர்களின் இல்லங்களைப் போன்றே கட்டப்பட்டுள்ளன. சில குடியிருப்புகள்

அடுத்தடுத்தும் சில குடியிருப்புகள் இரண்டு முதல் ஐந்து கி.மீ. இடைவெளியிட்டும் காடுகளுக்குள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் எல்லாக் குடியிருப்புகளுக்கும் இடையே நல்ல தொடர்பு உண்டு.

“குடி என்னும் சொல்லுக்கு ஊர்ப் பொழுது, குடியானவன், குலம், கோத்திரம், பட்டினம், மருத நிலத்தார், மனைவி, வீடு”[28] என்றும் “ஊர், குடிமக்கள், குடும்பர்”[29] “வாழ்விடம், வம்சம்”[30] என்றும் தமிழ் அகராதிகள் பொருள் தருகின்றன. இதன் வழி ஒரே பண்பாட்டையுடைய ஒரு கூட்டம், அல்லது மக்கள் கூடி வாழும் இடத்தைக் குடி என்று கொள்ளலாம்.

### 3.1.5.9.5. மக்கள் தொகை

‘2011-ஆம் ஆண்டின் இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி வெள்ளாளர்களின் மொத்த மக்கள் தொகை எண்ணிக்கை பின் வருமாறு அமைந்துள்ளது.

| **நாடுகள்** | **மொத்த எண்ணிக்கை** | **ஆண்கள்** | **பெண்கள்** |
|---|---|---|---|
| புங்கம்பட்டு நாடு | 6,199 | 3,221 | 2,978 |
| புதூர் நாடு | 6,451 | 3,193 | 3,258 |
| நெல்லிவாசல் நாடு | 5,859 | 2,871 | 2,988 |
| தென்மலை நாடு | 4,568 | 2,291 | 2,275 |
| முட்டு நாடு | 5,238 | 2,769 | 2,470 |
| மொத்த எண்ணிக்கை | 2,83,15 | 1,43,45 | 1,39,70 |

### 3.1.5.9.6. தோற்றப் பொலிவு

“மனிதர்கள் தாம் வாழும் சூழலுக்கேற்பவும் உடலமைப்பு, நிறம், செயற்பாடுகள், ஆகியவற்றைக் கொண்டுள்ளனர்”[31]. இந்த அடிப்படையில் பழங்குடிகளை **‘நீக்ராயிடு’, ‘மங்கோலாயிடு’, ‘ஆஸ்ட்ரோலோயிடு’** எனப் மூன்றாகப் பிரிக்கின்றனர். ஒரே அட்சரேகையில் வாழும் ஆப்ரிக்க ‘மிக்மிக்களும்’ கொச்சியின் ‘காடரும்’ ஒரே உடல் அமைப்பைக் கொண்டவர்களாக இருக்கின்றனர் என்று ‘எஹ்ரன் பெல்ஸ்’ (1952) தனது நூலில் குறிப்பிடுகின்றார். இவர்கள் **‘ப்ரோட்டோ ஆஸ்ட்ரோலோயிடு’** இனத்தைச் சார்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

மலையாளிகளின் உடலமைப்பைப் பொறுத்தளவில் இரு வேறுப்பட்ட தோற்றப் பொலிவினைக் கொண்டுள்ளனர். சிலர் உயரமாகவும், சிலர் உயரம் குறைந்தும், சிலர்

நல்ல உடற்கட்டுடனும், சிலர் எதிர்மாறாகவும் காணப்படுகின்றனர். தவிட்டு நிறம் கலந்த சாம்பல் நிறத்தை உடையவர்களாகவும்; கருப்பு நிறமுடையவர்களாகவும்; இருக்கின்றனர். கரு விழியிணையும், கருப்பு நிற மேனியையும் உடையவர்களாகவும், உதடுகள் சற்றுப் பெரிதாகவும், தலைமுடி சுருட்டையாகவும் காணப்படுகின்றனர். ஆரம்பக் காலங்களில் இவ்வின ஆண்கள் முடிவெட்டக் கூடாது என்ற பழக்கம் இருந்ததாக அறியமுடிகின்றது.

3.1.5.9.7. **மொழி**

மலையாளி இனப் பழங்குடி மக்கள் தொன்று தொட்டுத் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். வேறு எந்த இனத்திலும் இல்லாத தனித் தன்மை மலையாளிகள் பேசும் தமிழ் மொழிக்கு உண்டு. பிற இனத்தவர்கள் தமிழ் மொழியுடன் வேறு மொழியைக் கலந்து பேசுவதற்கு வாய்ப்புண்டு. ஆனால், மலையாளி இன மக்கள் கலப்படமில்லாத மொழியைப் பேசிவருகின்றனர். சமவெளி மக்கள் பேசுவதற்கும், மலையாளிகள் பேசுவதற்கும் நிறைய வேறுபாடுகளைக் காணலாம். இவர்கள் தமிழ் மொழியைக் சற்று இழுத்துப் பேசுகின்றனர். பேசும்போது ‘பின்னென்ன பின்னென்ன’ என ஒரு சில வார்த்தைகளுக்கு முன்னும் பின்னும் அடிக்கடி பயன்படுத்துகின்றனர். இவர்கள் பிற மொழிப் பேசும் மக்களோடு அதிகமாகப் பழகுவதில்லை. தம்முடைய தேவைக்கேற்ற சூழ்நிலையில் மட்டுமே பழகுகின்றனர். மலையாளிகள் தமிழ்மொழி பேசுவதற்குச் சான்றாக வாழ்வியல் களஞ்சியம் பின்வருமாறு குறிப்பிடுகிறது. “தமிழ்ப் பேசும் இப்பழங்குடி மக்கள் மலையில் வாழ்வதால் மலையாளிகள் எனப் பெயர் பெற்றனர். இம்மலையாளி இனப் பழங்குடியினர் ஒரே இனமானாலும் வெவ்வேறு இடங்களில் பரவி வாழ்வதால் பழக்கங்கள், பேசும்மொழி முதலியவற்றால் ஓரளவு வேறுபடுகின்றனர்”[32] என்கிறது.

உதாரணத்திற்குச் சிலவற்றை மட்டும் இங்கு காண்போம்.

| | மலையாளிகள் | |
|---|---|---|
| தூக்கம் | - | நித்திரை |
| சாப்பிட்டியா | - | திண்ணுடியா |
| கூழ் | - | கூலு |
| நிலம் | - | கொல்லை, காடு |
| குடிசை | - | கொட்டாய் |
| பன்றி | - | பண்ணி |

| | | |
|---|---|---|
| யானை | - | ஆணை |
| அப்பா | - | யப்போ, பா |
| அம்மா | - | யம்மோ, அம்மே, மா |
| இருக்கு | - | கீது |
| காணடிப்பது | - | தாரா போயிட்டுது |
| தொடாதே | - | தீட்டு |
| வரிசைப்பணம் | - | மொயி |
| இடம் | - | தாவு |
| வழி | - | தடம் |
| சாமி எருது | - | மூரி |
| தண்டப் பணம் | - | முறி வாங்குதல் |
| அணில் | - | அணத்தான் |
| முயல் | - | மோசுலு |
| மாலை | - | அந்தி |
| இரவு | - | ராவு, ராத்திரி |
| புல் | - | பில்லு |
| நோய் | - | நோவு |

### 3.1.5.9.8. ஆடவர் ஆடைகள்

இவ்வினத்தவரின் பெரியோர்கள் கம்பளிபோர்வையைப் போட்டுக்கொண்டும் சிலர் கோவணம் கட்டி, சட்டை அணிந்தும் காணப்படுகின்றனர். சிலர் 'லுங்கியை' (கைலியை) இடுப்பில் கட்டிக்கொண்டு தோளில் துண்டினைப் போட்டிருக்கின்றனர். விழாக்காலங்களிலும், வெளி ஊருக்குச் செல்லும் போதும் மட்டும் வேட்டியும், புது சட்டையும் அணிவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இளம் வயது ஆண்கள் காட்டு வேலைகளில் ஈடுபடும் போது, கிழிந்த சட்டை, 'லுங்கியுடன்' காணப்படுகின்றனர். வெளியிடங்களுக்குச் சென்றால் வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை அல்லது வேறு நிற புதுச் சட்டைகளை அணிந்து செல்கின்றனர். படித்த இளைஞர்கள் பேண்ட், டிசர்ட்டு, போன்றவற்றை உடுத்துகின்றனர். சிலர் காது குத்தி கடுக்கனும், கையில் கருப்புக் கயிரும் கட்டுகின்றனர் வசதி படைத்த

சிலர் மட்டும் கழுத்தில் தங்க நகை, கையில் தங்க மோதிரம் அணிந்து கொண்டிருக்கிறார்கள்.

3.1.5.9.8.1. **பெண்கள்**

வயதான பெண்கள் சிலர் இரவிக்கை அணியாமல் புடவையைக் கட்டி மார்பை மறைத்துக் கொள்கின்றனர். தென்னை ஓலையில் சிறிய வட்ட வடிவமான சுருள் செய்து காதில் அணிந்துக் கொள்கின்றனர். நடுத்தர வயதுப் பெண்கள் சாதாரண புடவை, ரவிக்கை உடுத்தி காதில் கவரிங் நகைகளை அணிந்து கெள்கின்றனர். விழாக் காலங்களில் மட்டும் புத்தாடையும் தங்க நகைகளையும் அணிந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இளம் பெண்கள் தாவணிப் பாவாடையும், படித்த சிலர் சுடிதாரும் அணிகின்றனர்.

**3.1.5.9.8.2. சிறுவர் சிறுமியர்**

சிறுவர்கள் வீட்டிலிருக்கும் போது பழைய கால்சட்டை அல்லது அரைக்கால் சட்டை அணிந்து கொள்கின்றனர். சிறுமியர்கள் பழைய பாவாடை சட்டையோடுக் காணப்படுகின்றனர். வெளியிடங்களுக்குச் செல்வதானால் புதிய பேண்ட் சட்டையும், சிறுமியர் புதிய பாவாடை தாவணி, அல்லது சுடிதார், மிடி போன்றவற்றை அணிந்து கொள்கின்றனர்.

பொதுவாக அனைவருமே வீட்டிலிருக்கும்போது சற்று அழுக்குப்படிந்த உடையை அணிந்திருப்பவர்களாகக் காணப்படுகிறார்கள். இவ்வாறு மலையாளிகள் தங்களுடையத் தகுதிக்குக் தகுந்தார் போல் மிக எளிமையான ஆடை அணிகலன்களை அணிந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். மேலும், பொங்கல், பண்டிகையின்போது மட்டுமே புத்தாடை எடுக்கும் வழக்கம் உடையவர்களாக இருக்கின்றனர். ஆண்டிற்கு ஒன்று அல்லது இரண்டு புதிய ஆடைகள் மட்டுமே எடுத்து உடுத்திக்கொள்கின்றனர். மற்ற நாட்களில் கிழிந்த பழைய ஆடைகளையே அணிந்து இருக்கின்றனர். இதற்குக் காரணம் இவர்களின் பொருளாதார நிலை ஆகும்.

**3.1.5.9.9. உணவு முறை**

மனிதனின் வாழ்வியல் ஆதாரங்களில் மிகமிக இன்றியமையா இடத்தைப் பெறுவது உணவு ஆகும். மலையாளிகள் தாங்கள் வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருட்களைத் தாங்களே தயார் செய்துகொள்கின்றனர். இவர்கள் உணவுப் பொருட்களை உற்பத்திச் செய்தல், சேகரித்தல், வேட்டையாடுதல் என்னும் முறைகளில் பெற்றுக் கொள்கின்றனர். ஆரம்ப காலங்களில் தேன், மக்காச்சோளம், கிழங்குகள், கீரை வகைகள், தினை, சாமை, கேழ்வரகுப் போன்றவைகள் இவர்களின் முக்கிய உணவுப் பொருளாகத் இருந்துள்ளன. ஆனால் தற்போது அரிசி இவர்களின் முக்கிய உணவுப் பொருளாக

இருக்கிறது. அரிசி கிடைக்காத சூழ்நிலைகளில் இவர்கள் தங்கள் காடுகளில் விளையும் பொருட்களை சார்ந்து இருக்கின்றனர். மலையாளிகள் உண்ணும் உணவு வகைகள் குறித்துக் கீழ்வரும் பகுதியில் விளக்கப்படுகின்றன.

3.1.5.9.9.1. **கிழங்கு வகைகள்**

மலையாளிகள் முள்ளுவள்ளிக் கிழங்கு, வெற்றிலை வள்ளிக் கிழங்கு, கவளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, கப்பைக் கிழங்கு, கருணைக் கிழங்கு, ஈச்சங் கிழங்கு, கூந்தன் கிழங்கு, பனை கிழங்கு போன்ற கிழங்கு வகைகளை உப்புச் சேர்த்து வேகவைத்து உண்பதுண்டு. பனம்பழங்களைக் சேகரித்துக் கூம்புமடை இட்டுக் கிடைக்கும் பனங்கிழங்கினை உப்புச் சேர்த்து வேகவைத்து சாப்பிடுவது சமவெளி வாழ் மலையாளியின் வழக்கமாகும். சிலர் தீயில் வாட்டியும் உண்கின்றனர்.

‘அடர்ந்த காட்டுப்பகுதியில் வாழ்கின்றவர்கள் கிழங்கு வகைகளைக் கல்லுக்காய்த்தும், மரக்கட்டைகளை அடுக்கி நெருப்பிட்டும் மூங்கில் குழல்களில் வைத்துச் சமைத்தும் உண்கின்றனர். மலைநாட்டைக் காவல் புரியும் மக்கள் இயற்கையில் கிடைக்கும் கிழங்கு வகைகளை மரக்கட்டையில் தீமூட்டிச் சுட்டு உண்டதாக’ ‘தமிழர் உணவு என்னும் நூலில் நமச்சிவாயம் அவர்கள் கூறுகிறார்.

3.1.5.9.9.2. **கீரை வகைகள்**

மலையாளிகள் கீரையை ‘ரெக்கிரி’ என்றும் கூறுகின்றனர். இவர்கள் அதிகமாகப் பயன்படுத்துவது பண்ணைக் கீரையாகும். பண்ணைக் கீரையை நீர் விட்டு நன்கு அலசியப் பின், காட்டில் கிடைக்கும் காட்டு மிளகாய், உப்புச் சேர்த்து வேகவைக்கின்றனர். பின்பு அதனை மத்தில் கடைந்து வெங்காயம், பூண்டு போட்டுத் தாழித்து விடுகின்றனர். பிறகு இவற்றை களி, அல்லது சாதம், வேகவைத்த கிழங்கு ஆகியவற்றோடு சேர்த்து உண்கின்றனர். மேலும் பொண்ணாங்கன்னிக் கீரை அகத்திக் கீரை, சிறு தக்காளி இலை, பூசணிக் கீரை, சேமக் கீரை, போன்றவற்றையும் தங்கள் உணவில் சேர்த்துக் கொள்வதுண்டு. கீரைக் குழம்பு பெரும்பாலும் கேழ்வரகு, கம்பங்களிக்குப் பொருத்தமாக இருக்கும்.

**3.1.5.9.9.3. தானிய வகைகள்**

மலையாளிகள் முன்பு ராகி, சோளம், திணை, கீரை விதை, மூங்கிலரிசி, வரகு, சாமை, மலைநெல் போன்ற தானியங்களை வெயிலில் உணர்த்தி பின்பு உரலிலிட்டுக் குத்தி அரிசியைச் சமைத்துச் சாப்பிட்டு வந்தனர். இதற்கான வேலைகள் அதிகம் என்பதால் இத்தகைய தானியங்களைப் பயிரிடுவது இன்று அரிதாகக் காணப்படுகிறது. இவ்வாறு ஒரு சில தானியங்களைப் பயிர் செய்தாலும் அவற்றை அறுவடை செய்து

சமவெளிப் பகுதியில் உள்ள மண்டிகளில் விற்றுத் தங்களுடைய பொருளாதாரக் தேவையை நிவர்த்தி செய்து கொள்கின்றனர். பின்னர் கூட்டுறவு கடைகளில் கிடைக்கும் அரிசியை வாங்கி சமைத்து உண்கின்றனர். இதனால் மேற்கூறப்பட்ட தானியங்கள் அனைத்தும் அழிந்து வரும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

### 3.1.5.9.9.4. காய்கறிகள்

காடுகளில் கிடைக்கும் முள்கத்திரிக்காய், சுண்டைக்காய்ப் போன்றவற்றைக் குழம்பு வைத்து உண்கின்றனர். தங்களுடைய நிலங்களில் பயிரிடக் கூடிய பூசணிக்காய், சுரக்காய், தக்காளி, அவரை, கொத்தவரங்காய், பந்தலவரக்காய், வெண்டைக்காய், முருங்கைக்காய், கத்திரிக்காய், பாகற்காய்ப் போன்ற காய்கறிகளைக் குழம்பில் போட்டுக் களியோடு அல்லது சோற்றில் சேர்த்து உண்கின்றனர். மேலும், கொள்ளு, துவரைப் போன்றவற்றையும் உணவில் சேர்த்துக்கொள்கின்றார். இன்று சிலர் துவரைப்பருப்பு, பாசிப்பருப்பு, கடலைப் பருப்பு போன்றவற்றை சமவெளிக் கடைகளில் வாங்கி வந்து காய்க்கறிகளுடன் சேர்த்தும் உண்கின்றனர். ஆனால், இவை விழாக்காலங்கள், திருமணம், போன்ற நாட்களில் மட்டுமே பயன்படுத்துகின்றனர். மற்ற நாட்களில் மிக அரிதாகவே இதனைப் பயன்படுத்துக்கின்றனர்.

### 3.1.5.9.9.5. பழ வகைகள்

மலையாளிகள் பலாப்பழம், மாம்பழம், வாழைப்பழம், கொய்யாப்பழம், எழுமிச்சை, நெல்லிக்கனி, சீத்தாப்பழம், புளியம்பழம், இலந்தைப்பழம், நாவல்பழம், ஈச்சம்பழம், கொட்டாப்பழம், காக்ணாம்பழம், விளாம்பழம், கலாபழம், மூலாம்பழம், அத்திப்பழம், காரப்பழம் போன்ற பல வகை பழங்களைப் பயிரிட்டும், காடுகளிலிருந்து சேகரித்தும் உண்கின்றனர்.

### 3.1.5.9.9.6. கொட்டை வகைகள்

தாண்டி மரக்காயின் உள் பகுதியில் கொட்டை இருக்கும். அந்தக் கொட்டையை உடைத்தால் உள்ளுக்குள் பருப்பு இருக்கும். அது சுவையானது. இதை மலையாளி இனச் சிறுவர்கள் உடைத்துப் பருப்பை உண்கின்றனர். மேலும், நிலக்கடலையைப் பச்சையாக அல்லது வேகவைத்தும் வறுத்தெடுத்தும் அவ்வப்போது உண்பதும் உண்டு. மக்காச்சோளம், சோளம் போன்றவற்றைத் தீயில் சுட்டும் வேகவைத்தும் அல்லது வறுத்தும் மலையாளிகள் உண்கின்றனர்.

தேன் மலையாளிகளின் முக்கிய உணவாகும். தேன் சேகரிக்க காடுகளுக்குக் காலை சென்றால் மாலை வரை காட்டிலேயே இருந்து தேன் சேகரித்து வருகின்றனர். அப்பொழுது அவர்களின் பசியைப் போக்கும் உணவாகத் தேன் இருக்கின்றது. தான்

உண்டு எஞ்சிய தேனை மலையாளிகள் வீட்டிற்கு எடுத்து வருகின்றனர். மழைக் காலங்களில் கிடைக்கும் காளான்களையும் மலையாளிகள் விரும்பி உண்கின்றனர்.

### 3.1.5.9.9.7. இறைச்சி உணவு

மலையாளிகள் வீடுகளில் வளர்க்கப்படும் பன்றி, கோழி, ஆடு போன்றவற்றையும், காடுகளில் கிடைக்கும் காட்டுக் கோழி, முயல், மான், அணில், காட்டு ஆடு, வரையாடு, முள்ளம்பன்றி போன்றவற்றை வேட்டையாடி அவற்றின் இறைச்சியையும் உண்டு வந்தனர். இப்பொழுது வேட்டையாடுவதற்கு அரசு தடை விதித்துள்ளதால் முன்பு போல் இவர்கள் வேட்டைக்குச் செல்வதில்லை. எனவே, பலவித மாமிச உணவு வகைகளை அடிக்கடி சாப்பிட முடிவதில்லை. அசைவ உணவு சாப்பிட வேண்டும் என்றால் தங்களுடைய வீட்டில் வளர்க்கும் ஆடு, கோழி, பன்றி போன்றவற்றை மட்டும் உண்கின்றனர்.

மலையாளிகள் எந்தெந்த மாதங்களில் என்னென்ன உணவுப் பொருட்கள் கிடைக்கும் என்பதை அறிந்து வைத்துள்ளனர். இவர்கள் உணவு சேகரிக்க எளிமையான ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றனர். இயற்கையோடு இயைந்து வாழும் மலையாளியினப் பழங்குடி இன மக்களின் உணவு முறைகள், இயற்கை சார்ந்தே அமைகின்றன. எனவே மலையும் காடும் நிறைந்த பகுதியில் வாழ்ந்து வரும் பல்வேறு பழங்குடியின மக்களின் பெரும்பாலான உணவுவகைகள், இவற்றை ஒத்தே காணப்படுகின்றன.

### 3.1.5.9.10. **குடிப்பழக்கம்**

மலையாளிகள் சிலர் போதைப்பொருட்களைப் பயன்படுத்துபவர்களாகவும், குடிப் பழக்கம் கொண்டவர்களாகவும் உள்ளனர். திருவிழா நாட்கள், திருமண விருந்துகள் போன்றவற்றில் சமவெளிப்பகுதிகளுக்குச் சென்று காய்ச்சிய 'பட்டைச் சாராயம்' வாங்கி வந்து பயன்படுத்துகின்றனர். புகையிலை, சுருட்டு, கள்ளு, போன்றவைகள் இவர்களின் முக்கியப் போதைப்பொருட்களாகும். முன்பு சிலர் காடுகளில் கிடைக்கும் 'சூரப்பட்டை', 'வெள்ளம்', உப்பு', போன்றவற்றை ஒரு பானையில் போட்டு மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை ஊரவைத்துச் சாராயம் காய்ச்சியதும் உண்டு.

### 3.1.5.9.11. அணிகலன்கள்

மக்கள் வாழ்க்கையில் அணிகலன்கள் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. பழங்காலம் முதல் இன்று வரை அணிகலன்கள் பல்வேறு படிநிலை வளர்ச்சியைப் பெற்றுள்ளன. சவ்வாது மலைமலையாளி, இனப் பெண்கள் 10 ஆண்டுகளுக்கு முன்பு தாலியைக்கூடத் தங்கத்தால் செய்வதில்லை, பித்தளையிலேயே இவர்களுக்கு வேண்டிய எல்லா அணிகலன்களையும் வைத்திருந்துள்ளனர். தாலி, கம்மல், மூக்குத்திப் போன்ற

முக்கிய அணிகலன்களையும் பித்தளையால் கோர்த்து கட்டியிருக்கின்றனர். சிலர் இத்துடன் பித்தளையால் செய்யப்பட்ட குண்டுகளையும் இணைத்துக் கட்டிக் கொள்வதுண்டாம்.

இவர்களின் ஒப்பனைப் பொருளாகப் பச்சைக்குத்துதல், சாந்துப்பொட்டு, மஞ்சள், குங்குமம், சந்தனம், மருதாணி, பவுடர் போன்றவைகளைப் பயன்படுத்துகின்றனர். தாலிக் கயிற்றில் சிலர் 25 பைசா நாணயத்தில் வளையம் வைத்துக் 'காசு மாலை' என்று அணிந்திருந்தனர். ஆண்கள் கயிற்றால் அரைஞாண் கயிற்றையும், கழுத்தில் கருப்புக் கயிற்றையும், கையில் பித்தளை மோதிரங்களையும் அணிந்துக்கொள்கின்றனர். ஆனால், இன்று நகர்ப்பகுதிகளோடு தொடர்பும் போக்குவரத்து வசதிகளும் உண்டாகி வருவதால் இவர்களது அணிகலன்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. விழாக் காலங்களில் தெய்வங்களின் சிலைகளுக்குப் பித்தளை மணிகளால் ஆன சில அணிகளைப் போட்டு அலங்காரம் செய்கின்றனர். சில சமயம் சமவெளிப் பகுதிகளில் இருக்கும் ஊர்களிலிருந்து நகைகளைக் கடனாக வாங்கி வந்து அலங்காரம் செய்வதும் உண்டு.

கூத்து ஆடும் போது ஆண்கள் கண்ணாடித் துண்டுகளில் உருவாக்கப்பட்ட பல வகையான வண்ண ஆடை, அலங்காரப் பொருட்களை வாங்கி அணிந்து கொள்கிறார்கள். தலைப்பாகை இவர்களுக்கு மகுடமாகவும் இருக்கிறது. முகம் ஒப்பனைப் பொருட்களும் பல வகையில் வாங்கி ஒப்பனைச் செய்துக்கொள்கிறார்கள். பெண்வேடக் கலைஞர்கள் கையில் பித்தளையால் ஆன வளையம், காதில் வடிவமைக்கப்பட்ட ஓலைகள், ரப்பர், கண்ணாடியால் செய்யப்பட்ட வளையல்கள், காட்டு மலர்கள் போன்றவற்றால் ஒப்பனை செய்து கொள்கிறார்கள்.

ஒப்பனைப் பொருட்களை அருகில் உள்ள ஊர்களுக்கு, நகர்ப்புறங்களுக்குச் செல்லும்போது அவசியம் வாங்கி வருகின்றனர். பின்னர் திருவிழா, திருமணம் போன்ற நாட்களில் இவற்றை அணிந்துக்கொள்கிறார்கள். மற்ற நாட்களில் அவற்றைப் பத்திரமாக மரப்பெட்டிகளில் பூட்டி வைத்து பாதுகாக்கின்றனர். இன்று போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டுள்ளதால் அணிகலன்கள் வாங்கி அணிவதில் மாற்றமும் புதுமையும் ஏற்பட்டுள்ளது.

### 3.1.5.9.12. வீட்டுகளின் அமைப்பு

சவ்வாது மலை மலையாளிகள் சிக்கனமான வாழ்க்கையை விரும்புவர். அவர்கள் வீடும் வீட்டுப்பொருள்களும் மிகவும் எளிமையானவை. மலையாளிகளின் வீடுகள் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கூரையால் வேயப்பட்டிருந்தது. ஒவ்வொரு வீடும் ஓர் அறை கொண்டது. வீடுகளை மலைச்சரிவிலும் தாழ்வான பகுதியிலும் அமைத்துள்ளார்கள். இந்த அமைப்பு மழை, நீர், காற்று இவைகளிலிருந்து காப்பாற்றிக்கொள்ள வசதியாக இருக்கும்.

மலையில் அமைந்துள்ள வீடுகள் பெரும்பாலும் ஆற்றங்கரைக்கு மேலும், அல்லது அருகாமையிலும் அமைந்துள்ளன. வீடுகளைச் சுற்றிலும் புளிய மரங்கள், தென்னை

மரங்கள், காட்டு மரங்கள் நிறைந்துள்ளன. இதன் அமைப்புத் தோப்புக்குள் இருக்கும் குடிசைகளைப் போன்று காணப்படுகின்றன. ஊர்களுக்கு உட்பட்ட பொது நிலப் பகுதியில் ஒவ்வொரு ஊரும் அமைந்துள்ளது.

மலையாளிகள் 200 ஆண்டுகளுக்கு முன்பு இயற்கையான காட்டை அழித்துத் தங்களுக்கு வேண்டிய நிலங்களை உருவாக்கி விவசாயம் செய்பவர்களாக இருந்தனர். ஆனால் இந்நிலங்கள் நிலையானவை இல்லை. அந்நிலம் வளம் குன்றியவுடன் வேறு வேறு இடங்களில் காட்டை அழித்து நிலத்தை உண்டாக்கி விவசாயம் செய்ததால், தங்கள் வீடுகளையும் அதற்குத் தகுந்தாற்போல் வேறு வேறு இடங்களில் மாற்றிக்கொள்ளும் வகையில் அமைத்திருந்தனர். இதன் காரணமாகத் தங்கள் வீடுகளை மிகச்சிறிய, குடிசைகளாக அமைந்திருந்தனர். ஜாகீர் முறை நீக்கப்பட்ட (1976-க்குப்) பிறகு, நிலங்களை வேறு இடத்தில் உருவாக்க முடியாமல் சுமார் 20 ஆண்டுகளாகத் தங்கள் வீடுகளையும் மாற்றிக்கொள்ளாமல் இருக்கிறார்கள். வீட்டின் சுவரைப் பெரிய கற்களை அடுக்கி மண்ணைக் குழைத்துச் சேர்த்துக் கட்டுகின்றனர். வீட்டின் சுவர்கள் 8 அடிக்கும் குறைவாக இருக்கிறது. நான்கு சுவர்களைக் கொண்ட ஒரு அறையே வீடாக இருக்கிறது. சன்னல் என்பது எந்த வீட்டிற்கும் இல்லை.

வீடுகளை மூங்கில், காட்டுக் கழிகளால் அமைத்து மஞ்சப் புல் என்ற நீண்ட புல்வகையைக் கொண்டு கூரை அமைத்துள்ளனர். இந்த மஞ்சம் புல்லைச் சமவெளியிலிருந்தும், காட்டில் சில இடங்களிலிருந்தும் கொண்டு வருகின்றனர். இந்தப் புல் ஐந்து ஆண்டுகளுக்கு மேலும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கிறது. முற்றின மூங்கிலைப் பிளந்து குடிசைக்குச் சுவராகவும் அமைத்துள்ளார்கள். பெரிய பெரிய காட்டு மரங்களை வீட்டிற்குக் குறுக்காகப் (தூண்களாக) பயன்படுத்துகின்றனர். காட்டு நார்களால் கூரைக் கழிகளைக் கட்டுகின்றனர்.

வீடுகள் பெரும்பாலும் எதிர் எதிராகக் கட்டி இருக்கிறார்கள். தெற்கு வடக்காகவும், வடக்குத் தெற்காகவே வீட்டின் முகப்பு அமைக்கப்பட்டுள்ளது. வீடுகள் குனிந்து போகும்படியாகத் தாழ்வாக இருக்கின்றன. ஒவ்வொரு வீடுகளுக்கு முன்பும் திண்ணை வைத்துக் கட்டப்பட்டுள்ளது. திண்ணைகளில் விவசாயப் பொருட்கள், விறகுகள் போன்றவற்றை வைத்துப் பயன்படுத்துகின்றனர். திண்ணையின் மூலையில் சிறு பட்டி அமைத்து அதில் பன்றி, கோழிகளை அடைத்துப் பாதுகாத்து வருகின்றனர்.

குடிசைக்குப் பக்கத்தில் ஆடு, மாடுகளை அடைப்பதற்கான பட்டிகளும் உள்ளது. இவை காட்டுக் கழிகளாலும், மூங்கில்களாலும் உருவாக்கப்பட்டுள்ளது. பட்டியில் தரைக்கு இரண்டடிக்கு மேல் பரண் அமைந்துள்ளார்கள். இந்தப் பரண்களில் மேல்தான் ஆடுகள் இரவில் தங்குகின்றன. இது காட்டு விலங்குகளிடமிருந்து ஆடுகளுக்குப் பாதுகாப்பாகவும் இருக்கிறது. குடிசைக்கு எதிரிலோ அல்லது உள் பக்கத்திலோ ‘தொம்பை’ (குதிர்)

அமைத்துள்ளனர். இதனை, தானியங்களைச் சேமித்து வைக்கப் பயன்படுத்துகிறார்கள். இவை மூங்கிலால் பின்னப்பட்டு, மண்கலந்த சாணத்தால் பூசப்பட்டிருக்கிறது. சாணம் பூசப்படுவதால் செல், பூச்சிகள் அரிக்காமல் பாதுகாக்கப்படும் என்கின்றனர்.

வீட்டிற்கு வெளியில் பரண் அமைந்துள்ளது போல ஒவ்வொரு வீட்டிற்கு உள்ளேயும் ஒரு பரண் அமைத்துள்ளார்கள். இந்தப் பரண் 5 அடி உயரத்திற்கு மேல் இருக்கும். பரண்களை இரவில் படுத்துக் கொள்ளவும், வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள், விறகு, தானிய மூட்டைகள் போன்றவற்றை வைத்துக்கொள்ளவும் பயன்படுத்துகிறார்கள். மழைக் காலங்களில் பரணுக்குக் கீழே காட்டு மரங்களை எரித்துக் குளிர்காய்கிறார்கள். இது இரவில் மிருகங்களிடமிருந்து காப்பாற்றிக்கொள்ளவும் பாதுகாப்பாகவும் இருக்கிறது. பரண் மீது ஏறி இறங்க, மூங்கில் ஏணியைப் பயன்படுத்துகிறார்கள். பரண் என்பதை ‘அட்டம்’ என்று கூறுகிறார்கள்.

வீடுகளுக்கு இன்று பெரும்பாலும் மரக்கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. ஐந்தாண்டுகளுக்கு முன்பு மூங்கில் பட்டைகளால் செய்யப்பட்ட கதவுகளே பயன்படுத்தி வந்தனர். வீட்டின் உள்ளே தென் கிழக்கு மூலையில் அடுப்பை வைத்திருக்கின்றனர். வீட்டை வாரத்திற்கு ஒரு முறை எருமைச் சாணத்தால் மெழுகிச் சுத்தம் செய்கிறார்கள். தினமும் காலையில் வீட்டிற்கு முன்பு சாணத்தைக் கரைத்துத் தெளித்துக் கோலம் போட்டு வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்கின்றனர்.

ஒவ்வொரு வீட்டாரும் வேட்டையாடவும் விலங்குகளிடம் இருந்து தங்கள் பயிர்களைப் பாதுகாக்கவும் ஒன்றிற்கு மேற்பட்ட நாய்களை வளர்க்கின்றனர். இவ்வாறு மலையாளிகள் தாம் வாழும் இயற்கை சூழலுக்கு ஏற்ப தங்களுடைய வாழ்வியலை அமைத்துக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

### 3.1.5.9.13. வீட்டிற்குப் பெயரிடுதல்

மலையாளிகள் பிறரை அழைக்கும்போது அவர்கள் வீட்டின் பெயரை வைத்து அழைக்கின்றனர். இதற்குக்காரணம் அதிகமானவர்களின் பெயர்கள் ஒன்றுபோல் இருப்பதால் அவர்களைப் பிரித்தறிவதற்கு வீட்டுப்பெயர்கள் உதவுகின்றன. பொதுவாக, வீட்டிற்கு அருகில் பெரிய கற்கள், பாறைகள், மரங்கள் இருந்தால் அவைகளும் வீட்டுப்பெயருடன் இணைத்துச் சொல்வது வழக்கமாக இருக்கிறது. (எ.கா.) ‘பாறை’ குட்டாய் காளி’, ‘ஆலாமரத்து கொட்டாய் சேமன்’, ‘ரோட்டுக்கொல்லை இராமசாமி’, ‘கோவில் கொல்லை அண்ணாமலை’, ‘உயர்லஸ் துக்கன்’, ‘கீழ்கொல்லை சுப்பன்’ போன்றவற்றைக் கூறலாம்.

### 3.1.5.9.14. குடும்ப அமைப்பு

சமுதாயத்தில் குடும்பம் என்பது ஒரு முக்கியமான அங்கமாகும். குடும்ப அமைப்பின் அடிப்படை வடிவம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. ஒவ்வொரு சமுதாயத்திலும் குடம்பத்தின் அமைப்பு உள்ளது. இது எல்லாக் காலகட்டங்களுக்கும் அடிப்படையான ஒன்று. மலையாளிகளின் குடும்ப அமைப்பினைத் ‘தனிக்குடும்பம்’, ‘கூட்டுக்குடும்பம்’ என்று இரண்டாகப் பிரிக்கலாம்.

#### 3.1.5.9.14.1. தனிக்குடும்பம்

மலையாளி இனப் பழங்குடிகளில் புதியதாகத் திருமணமாகியத் தம்பதிகள் கணவன் பிறந்த வீட்டின் அருகில் புதிய வீடுகளைக்கட்டி குடியிருக்கும் இயல்பினைக் கொண்டுள்ளனர். ஒருவனுக்குப் பல மனைவியர் என்ற மரபை உடைத்துதெரிந்துவிட்டு ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றனர். தந்தை இறந்துவிட்டால் தாயுடன் பிறந்த சகோதரர் பாதுக்காப்புக் கொடுக்கின்றார்.

#### 3.1.5.9.14.2. **கூட்டுக்குடும்பம்**

கூட்டுக்குடும்பத்தில் தாய், தந்தை, மணமாகாதப் பிள்ளைகள், பேரக்குழந்தைகள் என அனைவரும் ஒரே குடும்பமாக வசிப்பதை மலையாளி இன மக்களிடையே காணமுடிகிறது. இவர்கள் தந்தை வழியினருக்கோ அல்லது தாய் வழியினருக்கோ சரிசமமான முக்கியத்துவத்தை அளிக்கிறார்கள். இருப்பினும் வீடுகளில் தந்தை வழி உறவினர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சொத்துரிமை ஆண் வாரிசுகளுக்கே அளிக்கப்படுகிறது. பெண்களுக்கு இல்லை. ஒரு குடும்பத்தில் ஆண்மகன் இல்லையென்றால் அச்சொத்து மருமகனுக்குச் செல்கிறது. மகனோ, மருமகனோ இல்லையென்றால் மட்டுமே சொத்து மகளுக்கு உரிமையாகிறது.

### 3.1.5.9.15. சமுதாய அமைப்பு

“ஒரு சமுதாயம் வளர்ச்சிபெற அச்சமுதாயத்தின் தலைமை சிறந்திருக்க வேண்டும். தலைமைப் பொறுப்பு வகிப்பவர்கள் நல்ல அனுபவமும், தொலைநோக்குப் பார்வையும் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் ஒரு குறிப்பிட்ட வளையத்திற்குள் இருந்து விட்டால் அச்சமுதாயம் சிறக்காது. பழங்குடிச் சமுதாயம் பாரம்பரியம் மிக்கது. ஒரு குறிப்பிட்ட வளையத்திற்குள்ளே அவர்களின் வாழிடங்கள் அமைந்திருப்பதால் இவர்களின் வளர்ச்சி நிலை மிகக் குறைவு. அதனால் பழங்குடிச் சமுதாயத்தின் மாற்றத்திற்கான வாய்ப்புத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தலைமையின் மூலமே தீர்மானிக்கப்படுகிறது”[33].

சவ்வாதுமலையில் 250-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. 40 முதல் 50 வீடுகள் உள்ள ஒரு கிராமத்தை ஊர் என்றும், 9 முதல் 15 ஊர்கள் சேர்ந்ததை ‘நாடு’

என்றும் பல நாடுகள் சேர்ந்ததை ‘தேசம்’ என்றும் மலையாளிகள் கூறுகின்றனர். மலையாளிகள் 18 நாடுகளில் வாழ்ந்து வருவதாகவும் தலைமை நாட்டார் முன்பு காணமலையில் இருந்ததாகவும் கூறுகின்றனர். இம்மக்கள் தங்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும், சமூக ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பதற்கும் ஏனைய இனங்களில் காணப்படுவதைப் போல தங்களுக்குள்ளாகவே ஒரு சமூக அமைப்பை வகுத்துக் கொண்டுள்ளனர். அவை பின்வருமாறு,

1. பட்டாக்காரன்
2. நாட்டார்
3. காரியகாரர்
4. ஊர் கவுண்டர்
5. கங்காணி

**‘பட்டாக்காரன்’** ஒவ்வொரு நாட்டிற்கும் பொதுவாக ஒரு பட்டாக்காரன் இருக்கின்றார். இவரே அவ்வினத்தின் மூத்த அதிகாரி. **‘நாட்டார்’** இவர் பட்டகாரருக்கு அடுத்தப்படியாக உள்ள அதிகாரி ஆவார். ஒரு குறிப்பிட்ட கிராமங்களை அல்லது ஊர்களை உள்ளடக்கிய **(நாடு)** பகுதியைக் கண்காணிக்கும் பொறுப்பு இவருடையது ஆகும். இவர் பட்டாகாரரால் பட்டங்கட்டப்பட்ட பின்னால்தான் **‘நாட்டார்’** என அழைக்கப்படுகிறார். மலையாளிகளின் பிரச்சனைகளைக் கிராமக் குழுவால் தீர்க்க முடியவில்லை என்றால் அந்தப் பிரச்சனை நாட்டாரிடம் கொண்டு செல்லப்படுகிறது. **‘நாட்டார்’** என்பவர் பல கிராமங்களுக்குத் தலைவர். ஒரு நாடுகளுக்கு உட்பட்ட கிராமங்களில் எழும் பிரச்சனைகளைத் தீர்ப்பவராக இவர் செயல்படுகிறார். இரு நாடுகளுக்கிடையே வரும் பிரச்சனைகளுக்குப் பல நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றாகக் கூடி தீர்வினை வழங்குகின்றனர்.

**‘காரியக்காரர்’** இவர் நாட்டாருடைய உதவியாளர் ஆவார். நாட்டார் இடும் உத்தரவை ஊர் தலைவரிடம் கொண்டு செல்வதே இவரின் பணியாகும். **‘ஊர் கவுண்டர்’** இவர் நாட்டாரால் தேர்வு செய்யப்படுகிறார். ஒவ்வொரு ஊரிலும் தனித்தனியாக ஊர் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்வூரைக் கண்காணிக்கும் பொறுப்பைப் பெறுகிறார். மேலும், ஊரின் முக்கிய நிகழ்வுகளை முன்னின்று நடத்துபவர்களாகவும், கண்காணிப்பவர்களாகவும், ஊர் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குபவர்களாகவும் இவர் இருக்கின்றார். நாட்டார் இடும் உத்தரவை ஊரில் அமலாக்குவதே இவரின் வேலை ஆகும்.

**‘கங்காணி’** இவர் ஊர்கவுண்டரின் உதவியாளர் ஆவார். இவருடைய வேலைச் சற்று கடினமானதாகும். ஊர் கூட்டம், ஊர் பிரச்சனைகள், ஊர் பொது நிகழ்வுகள் எதுவாக இருப்பினும் அச்செய்தியை ஊர் மக்களிடம் தெரிவிப்பது, சுபகாரிய விருந்துகளில் பகிர்ந்தளிப்பது, **‘புரு’** (வரி) பணம் வசூல் செய்வது போன்றவை இவரின் முக்கியப் பணிகளாகும். இவரும் வம்சாவழியின் மூலமாகவே தேர்வு செய்யப்படுகிறார். சிலர் விதிவிலக்காக மாற்றப்படுவதும் உண்டு.

இவர்களுக்குச் சம்பளமோ, ஊதியமோ கொடுக்கப்படுவதில்லை. மாறாகத் தெய்வங்களுக்குப் படைக்கப்படும் படையல்கள் அதாவது தேங்காய், வாழைப்பழம், பொறி போன்ற உணவுப் பொருட்கள் வீட்டிற்கு ஒரு ‘பங்கு’ என்றால் கங்காணிக்கு இரண்டும், ஊர் கவுண்டருக்கு மூன்று ‘பங்கும்’ கொடுக்கப்படுகிறது.

### 3.1.5.9.15.1. நிர்வாகிகள் தேர்வு செய்யும் முறை

மலையாளிகளின் நிர்வாகக் குழு பதவியானது மிகமுக்கியமான பொறுப்பாகும். இவர்கள் பெரும்பாலும் வம்சாவழியின் அடிப்படையிலும், நற்பண்புகள், ஊர் பிரச்சனைகளின் போது நடந்துக்கொள்ளும் தன்மை, நிர்வாகத் திறன் போன்ற சில முக்கியத் தகுதிகளின் அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களுடைய **‘பட்டங்கட்டுதல்’** (பதவியேற்பு) எனப்படுவது பெரிய விழாவாகவே கொண்டாடப்படுகிறது. நல்ல நாள் பார்த்து மக்கள் அனைவரும் இவ்விழாவிற்கு அழைக்கப்பட்டு, அவர்களின் முன்னால் ‘பட்டாகாரன்’ தலைமை நாட்டாருக்கும், ‘தலைமை நாட்டார்’ ‘ஊர்தலைவருக்கும்’ பட்டங்கட்டுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பட்டம் கட்டப்படுபவர் மேளத் தாளத்துடன் வீட்டிலிருந்து ஊர் பொது இடமான ‘மந்தை’க்கு அழைத்து வரப்பட்டு அங்கிருக்கும் தெய்வங்கவைணங்கி அலங்கரிக்கப்பட்டுள்ள மேடையில் அமர்த்தப்படுகின்றார். பின்னர் பச்சை மூங்கிலில் சந்தனம், குங்குமம், மஞ்சள் பூசி பூமாலை கட்டி சாமிமுன் வைத்து ஆசிபெருகின்றனர். அந்த மூங்கில் கோலைப் பட்டாகாரன் தலைமை நாட்டாரிடம் கொடுத்து இன்று முதல் ஊரையும், ஊர்மக்களையும் காப்பாயாக! ஊர் பிரச்சனைகள் ஏற்படும் காலத்தில் அண்ணன், தம்பி, சொந்தம், பந்தம், உற்றார் உறவினர்கள் என்று பார்க்காமல் நீதியின் பக்கம் நின்று தீர்பு வழங்குவேன் என்ற உறுதிமொழியை ஏற்கச் செய்கின்றனர். அதன் பின்னர் வந்திருப்பவர்கள் அவருக்கு மாலைகள், போர்வைகள் என அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர். பதவி ஏற்பவர் கிராம மக்களுக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் வேட்டி, சேலை கொடுக்கின்றார்கள். விழாவிற்கு வந்தவர்கள் மொய்வைக்கும் வழக்கம் பின்பற்றப்படுகிறது. அதனையடுத்து அனைவருக்கும்

அசைவவிருந்து பரிமாரப்படுகிறது. மேல் கூறப்பட்டவர்கள் அனைவருக்கும் இம்முறைகளிலேயே பட்டங்கட்டுதல் நிகழ்த்தப்படுகிறது.

### 3.1.5.9.15.2. நாட்சேவர் (ஓடு பிள்ளை)

நாட்சேவர் என்பவர் தலைவருக்கு அடுத்த நிலையில் உள்ளவர். வம்சாவழியின் மூலம் தேர்வு செய்யப்படும் இவரின் வேலை சற்றுக் கடினமானதாகும். ஊரின் 'கும்பல்' (கூட்டம்) பற்றிய செய்தியை மக்களிடம் தெரிவிப்பது, ஊரின் சுபகாரியங்கள், முக்கிய நிகழ்வுகள் போன்றவற்றில் உணவு, கறி போன்றவற்றைப் பகிர்ந்து கொடுப்பது, ஊரின் விழாக்காலங்கில் விழா பற்றிய செய்தியை நாட்டாரிடம் கொண்டு சேர்ப்பது போன்ற முக்கியமான பொறுப்புகள் இவருக்கு உண்டு. இவர்களுக்குச் சம்பளம் எதுவும் வழங்கப்படுவதில்லை. மாறாக ஆண்டிற்கு ஒரு முறை ஊர் மக்கள் தங்கள் நிலங்களில் விளையும் தானியங்களில் சிறிதளவு கொடுக்கின்றனர். இதனை **'மேரை'** (மதிப்பு) வாங்குதல் என்று கூறுகின்றார்கள்.

### 3.1.5.9.15.3. பஞ்சாயத்துக் கூடுதல்

மலையாளிகள் முன்பு பொது, தனிப்பட்ட பிரச்சனைகள் வரும்போது பாதிக்கப்பட்டவர் ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு வைத்து ஊர் தலைவர்களிடம் கொடுத்துப் பிரச்சனைகளைக் கூறவேண்டும் என்பது இவர்களின் மரபாகும். தலைவர் **'நாட்சேவர்'** (செய்தி சொல்லுபவர் அல்லது ஓடுபிள்ளை) மூலம் பஞ்சாயத்துக் கூட்டம் கூட்டப்படும். பஞ்சாயத்துப் பெரும்பாலும் பகல் நேரங்களில் கூடும். தவிர்க்கமுடியாத காரணங்களால் இரவு நேரங்களில் கூடுவதும் உண்டு. பொதுவாகப் பெண்கள் பஞ்சாயத்தில் கலந்துக் கொள்வதில்லை. பெண்கள் சார்ந்த பிரச்சனைகள் என்றால் பிரச்சனைக்குரிய பெண்கள் மட்டும் கலந்துக்கொள்வர்.

மலையாளிகளின் பஞ்சாயத்துக் குழுவானது **'மந்தை'** (ஊர்பொது இடம்) யில் கூடும். இதனை **'சாவடி'** என்றும் கூறுகின்றனர். சாவடியின் மேல் பாய் போட்டு ஊர் தலைவர், நாட்டாமை, மூப்பன், கோவில் பூசாரி, கணக்குப்பிள்ளை ஆகிய முக்கியப் பொருப்புக்கள் உள்ளவர்கள் அவற்றின் மீது உட்காருவர். மற்றவர்கள் கீழேயும், குற்றம் செய்தவர்கள் இடது புறமாகவும் உட்கார்ந்து இருப்பார்கள். பஞ்சாயத்தில் வீட்டிற்கு ஒருவர் தவறாமல் கலந்துக்கொள்ள வேண்டும். தவிர்க முடியாத காரணங்களினால் வரவில்லை எனில் உரிய கரணங்களை ஊர்தலைவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். தெரிவிக்காமல் இருந்தால் அதற்கான அபராதம் கட்ட வேண்டும்.

### 3.1.5.9.15.4. பஞ்சாயத்துக் கட்டுப்பாடுகள்

மலையாளிகள் ஊர் கட்டுப்பாட்டில் அதிகக் கவனம் செலுத்துகின்றனர். பரம்பரைப் பரம்பரையாகச் சில கட்டுப்பாடுகளைப் பின்பற்றியும் வருகின்றனர். இவைகளை மீறி செயல்படும் செயல்களைக் குற்றங்களாகக் கருதுகின்றனர். அவை வருமாறு.

1. கொலை செய்தல் கூடாது
2. கொள்ளையடித்தல் (அ) திருடுதல் கூடாது
3. பெண்களைக் கடத்துதல் கற்பழித்தல் கூடாது
4. விபச்சாரம் செய்தல் கூடாது
5. ஊர் நலன்களைக் கெடுக்கும் வகையில் யாரும் ஈடுபடக் கூடாது
6. ஒருவர் பிறர் சொத்துக்கு உரிமைக் கொண்டாடுதல் கூடாது
7. சாரயம் காய்ச்சவோ விற்கவோ கூடாது
8. விழாக் காலங்களில் தவறாமல் வரி கட்டவேண்டும்
9. பஞ்சாயத்தார் கடமை தவறுதல் கூடாது
10. இனக்கலவரங்கள் செய்தல் கூடாது
11. குற்றம் செய்து ஊர்கட்டுப்பாட்டிற்குக் கட்டுப்படாமல் நீக்கப்பட்டவர்களிடம் யாரும் பேசக்கூடாது

மேற்கூறப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறி நடந்தால் அவர்கள் குற்றம் செய்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

### 3.1.5.9.15.5. பஞ்சாயத்தின் தனித்தன்மைகள்

மலையாளி இன மக்கள் தங்களுடைய பஞ்சாயத்துக்களில் **'முறிகட்டுதல்', 'முறிவாங்குதல்'** என்ற விதிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். **'முறி கட்டுதல்'** என்பது பஞ்சாயத்துத் துவங்குவதற்கு முன்னர் குற்றம் செய்தவர் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு 'ஊர் பஞ்சாயத்துக்குக் கட்டுப்படுகிறேன்' என்று முறி கட்டுகிறார். முறி என்பது பசுவின் காய்ந்த சாணத்தில் ஒரு சிறு துண்டுப் பகுதியைக் குற்றம் செய்தவர் எடுத்து ஊர் தலைவர், நாட்டாமை முன்னிலையில் 'நான் ஊர் பஞ்சாயத்துக்குக் கட்டுப்படுகிறேன்' என்று ஒரு தட்டில் வைக்கவேண்டும். அதன் பின்னரே பஞ்சாயத்து நடைபெறும். பசுவின் சாணத்தைப் பஞ்சாயத்தில் பயன்படுத்த காரணம் மலையாளிகள் பசுவினைத் தெய்வமாகவும், தங்குளுடைய செல்வங்களாகவும் கருதுவதுதான் காரணம். இன்றும் மலையாளிகள் ஒவ்வொரு வீட்டிற்கும் குறைந்தது 10 முதல் 30 பசுக்கள் வரை வைத்திருக்கின்றனர். இவைகளை வைத்தே இவர்களின் குடும்பங்களை மதிப்பிடுகின்றனர்.

### 3.1.5.9.15.6. முறி வாங்குதல்

**‘முறி’** வாங்குதல் என்பது முன்பு குற்றம் செய்தவர்களிடமிருந்து அபராதத் தொகை வாங்குவதைத் தவிர்த்தல் பொருட்டு மேல் கூறப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் வரும் காலங்களில் குற்றங்கள் செய்யமாட்டேன் என்று கூறி வைப்பதை **‘முறி வாங்குதல்’** என்று கூறுகின்றனர். முறி வாங்குதல் என்பது எல்லா குற்றங்களுக்கும் பொருந்தாது. இன்று அவ்வழக்கம் மாறி ஒரு குறிப்பிட்ட தொகையை அபராதமாக வாங்குகின்றனர். இதனைத் **‘தண்டம்’** என்று கூறுகின்றனர். குற்றம் செய்தவர் பஞ்சாயத்தில் முறி கொடுக்க மறுத்தால் கட்டிய முறிக்குப் பதில் சொல் என்று கேட்கின்றனர். பின்னர் அவரைப் பஞ்சாயத்துக்குக் கட்டுப்படாதவர் என்று ஊரை விட்டு ஒதுக்கி வைக்கின்றனர்.

### 3.1.5.9.15.7. குற்றமும் தண்டணையும்

மலையாளி இன மக்களிடையே பெரும்பாலும் சொத்துத் தகராறு, குடும்ப தகராறு, திருட்டுப் போன்ற பிரச்சனைகளுக்காகப் பஞ்சாயத்துக் கூட்டப்படுகிறது.

1. சொத்துப் பிரச்சனைகள் பஞ்சாயத்திற்கு வரும் பொழுது இருதரப்பினரையும் அழைத்து இருவருக்கும் இழப்பு ஏற்படா வண்ணம் சொத்துக்களைச் சரிசமமாகப் பங்கிட்டுக் கொடுத்துப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கின்றனர்.
2. கணவன் மனைவிடையே கருத்து முரண்பாடுகள் சார்ந்த பிரச்சனைகளாக இருப்பின் இருவரையும் அழைத்து விசாரித்துக் குற்றம் இருப்பவர்களைக் கண்டித்துக் குடும்ப வாழ்க்கையைத் தொடரச் செய்யுமாறு கூறுவர்.
3. முன்பு திருட்டுக் குற்றமாக இருந்தால் திருடியவரிடம் ஒன்னேகால் அல்லது ஏலேகால் ரூபாய் பணத்தைத் தண்டமாக வாங்கியுள்ளனர். தற்பொழுது 5001 கால் ரூபாய்க்கும் அதிகமாக வாங்குகின்றனர். தண்டப் பணம் ஏன் ஒன்னே கால் ரூபாய் வாங்க வேண்டும் என்று கேட்டதற்குப் பதினெட்டுப் பட்டி நாட்டாமைகள் ஊர் கட்டுப்பாட்டிற்காக இத்தகைய நிர்ணயம் செய்திருந்தனர் என்றும், இதில் ஒரு ரூபாய் பாதிக்கப்பட்டவர்களுக்கும், கால் ரூபாய் ஊர் பொதுவுக்கும் வாங்கப்பட்டு வந்ததாகவும் அவ்வழக்கம் இன்றும் பின்பற்றப்பட்டு வருவதாகவும் கூறுகின்றனர்.

### 3.1.5.9.15.8. அதிகப்படியான தண்டனைகள்

கொலை, கற்பழிப்புப் போன்ற வண்மையான குற்றங்களுக்கு இவ்வினத்தில் அன்று அதிகப்படியான தொகையாக ரூ.2000 அபராதம் வாங்கப்பட்டுள்ளது. சாதிக்கட்டுப்பாடுகள் இருந்தமையால் இவைப் போன்ற குற்றங்கள் முன்பு நடைபெறவில்லை என்று கூறுகின்றனர். இன்று இவைப்போன்ற குற்றங்கள் காவல்துறையிடம் ஒப்படைக்கப்படுகிறது என்றும் கூறுகின்றனர்.

பஞ்சாயத்திற்குக் கட்டுப்படாதவர்களை ஊரைவிட்டே ஒதுக்கி வைப்பதே இவர்கள் பஞ்சாயத்தின் அதிகப்படியான தண்டனையாக இருக்கின்றது. மேலும் மலையாளி இனத்தில் ஒரு பெண் வேறு சாதி ஆணையோ அல்லது ஒரு ஆண் வேறு சாதி பெண்ணையோ மணம் செய்துக்கொள்ள அனுமதிப்பது கிடையாது.

### 3.1.5.9.16. கல்வி

சவ்வாதுமலை மலையாளி இனப் பழங்குடி மக்கள் போதிய கல்வியறிவின்றி வேலைக்குச் செல்லத் தெரியாமல் அரசு ஒதுக்கப்பட்டுள்ள புன்சை நிலங்களில் பயிர்செய்து வாழ்ந்து வருகின்றனர். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட களப்பகுதியில் இரண்டு பள்ளிகள் மட்டுமே இருந்துள்ளன. அதாவது மலையின் மேற்குப் பகுதிகளில் வசிக்கக் கூடிய மக்களின் வசதிக்காக 'புதூர்' என்கிற கிராமத்தில் ஒரு நடுநிலைப்பள்ளியும், தென்மலை மக்களின் வசதிக்காக மேல்பட்டுக் கிராமத்தில் ஒரு துவக்கப்பள்ளியும் வனத்துறையின் உதவியுடன் துவங்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள குழந்தைகள் கல்வி கற்க வேண்டும் என்றால் 15 முதல் 20 கீ.மீ. தொலைவில் காட்டுவழிப் பாதையில் நடந்து வந்துதான் கல்வி கற்க வேண்டும். இந்த மலைப்பகுதிகளில் சரியான சாலை வசதிகள் இல்லாததால் ஆசிரியர்களும் 30 கி.மீ. தொலைவிற்குமேல் கால் நடையாக நடந்து வந்து பாடம் கற்பித்துள்ளனர்.

இவர்கள் வாரத்தின் முதல் நாள் காலையில் ஆறு மணிக்கு மலையேறத் தொடங்கினால் மதியம் 1 மணிக்குதான் பள்ளி இருக்கும் பகுதியை வந்தடைவார்கள். மீண்டும் வாரத்தின் இருதிநாள் மதியம் 1 மணிக்கே பள்ளியை மூடிவிட்டுச் சென்றுவிடுவர். இதனால் மலையாளிகளின் குழந்தைகள் மூன்று நாட்கள் மட்டுமே பாடம் கேட்கும் நிலை உள்ளது. ஆசிரியர்கள் தங்குவதற்கு வேண்டிய பொருட்களையும் தலைச்சுமையாகவே எடுத்து வருகின்றனர். சில நாட்களில் மாணவர்கள் நான்கு அல்லது ஐந்து பேர் ஒன்று சேர்ந்து காட்டுவழிக்குச் சென்று ஆசிரியர்களை அழைத்து வருவதும் உண்டு. இவ்வாறு காட்டு விலங்குகளின் அச்சுறுத்தலையும் மீறி இவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்க வந்து சென்ற ஆசிரியர்களைக் கடவுள் என்றுதான் கூறவேண்டும். மலையாளிகளும் காட்டு விலங்குகளின் அச்சுறுத்தலால் அவர்களின் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில் அச்சம் கொள்கின்றனர். அதையும் துனிந்து சென்றவர்களின் ஒரு சிலர் மட்டுமே அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கல்வி அறிவைப் பெற்று அரசாங்கத்தில் இன்று வேலைச் செய்து வருகிறார்கள். இத்தகைய நிலை இந்தியா முழுவதும் பல்வேறு பழங்குடி மக்களிடத்தில் இன்றும் நீடித்து வருகிறது.

மலைவாழ் சமூகத்தினர் மேம்படவேண்டும் என்ற எண்ணத்தில்தான் மத்திய அரசாங்கம் பல திட்டங்களைத் வகுத்து அதற்கு நிதியும் ஒதுக்கி வருகிறது. சட்டப்பிரிவு 46-இன் படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் ஆரம்பக் கல்வி வழங்க

வேண்டுமமென 1950-களில் இந்திய அரசு அறிவித்தது. மேலும், 1964-1966-களில் கோத்தாரிக் கல்விக்குழு ஒரு கிராமத்திலிருந்து ஒரு கி.மீ. சுற்றளவுக்குள் ஒரு ஆரம்பக் கல்விக்கூடமும், மூன்று கி.மீ. சுற்றளவுக்குள் ஒரு நடுநிலைக் கல்விக் கூடமும் அமைக்கப்பட வேண்டுமென்று அறிக்கை சமர்பித்திருந்தது. ஆனால் மலையாளிகளின் வாழிடங்களை அறிந்துக்கொள்ள முடிந்ததில் அத்தகைய செயல்பாடுகள் முழுமையாகச் செயல்படுத்தவில்லை. அதனைச் செயல்படுத்தும் அதிகாரிகளின் மெத்தனப் போக்கால் ஒதுக்கப்பட்ட நிதியையும் முறையாக மக்களுக்குச் செலவிடப்படுவதில்லை. செலவிடப்பட்ட சிறு தொகையும் முழுமையாகப் பயனாளிகளுக்குச் சென்று சேர்வதில்லை. கொஞ்சம் விழிப்படைந்து தேவையான வசதிகளைக் கேட்டால் போராடுகிறார்கள் என்று அடக்கு முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இன்று சாலைவசதிகள் அமைக்கப்பட்டுக் கூடுதலாகக் கிராமங்களில் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. இருப்பினும் மலையாளிகள் இன்று எழுதப் படிக்க தெரியும் அளவுக்கு மட்டமே பள்ளிக்குச் செல்கின்ற சூழல் உருவாகி உள்ளது. இதன் காரணமாக மலையாளிகள் கல்வி வளர்ச்சியில் பின் தங்கிய நிலையிலே உள்ளனர். ஒரு சிலர் மட்டுமே சமவெளிப்பகுதிகளுக்குச் சென்று மேற்படிப்பை தொடங்குகின்றனர்.

### 3.1.5.9.17. பொருளாதாரம்

“மக்களின் செயல்களுக்கு உறுதுணையாக அமையும் பொருட்களோடு தொடர்பு கொண்டதே பொருளாதாரம் ஆகும். அனைத்துச் சமுதாயமும் அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அந்த அடிப்படைத் தேவையானது, தொழில் நுட்பத்தைச் சார்ந்தும், இயற்கையைச் சார்ந்தும், கலாச்சாரப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டும் அமைகிறது. பழங்குடி மக்களின் பொருளாதார அமைப்புப் பொதுவான பொருளாதார அமைப்புடன் தொடர்புடையது அல்ல. ஏனென்றால் பழங்குடி மக்களின் பொருளாதாரம் சில குறிப்பிட்ட பண்புகளை மட்டுமே பெற்றுள்ளது”[34].

மலையாளிகள் மேற்கொள்ளும் பொருளாதாரத்தில் இலாபம் ஈட்டும் சூழல் இல்லை. உற்பத்தி செய்வதும், அதை நுகர்தலும், சில தொழில்களை மேற்கொள்வதுமே இவர்களின் குடும்ப நிலைகயாகும். இவர்களின் பண்டமாற்று முறை பெரும்பாலும் சமூக அமைப்பைச் சார்ந்தது. பொருளாதார அமைப்பைச் சார்ந்ததல்ல. ஒட்டுமொத்த மலையாளிச் சமூகமும் உழைத்து ஒருவருக்கொருவர் அவரவர் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். ஆனால் உற்பத்திச் செய்யப்படும் பொருளுக்கு விலை நிர்ணயித்து விற்பனை செய்யும் பழக்கம் இவர்களிடம் இல்லை. மலையாளிகள் மலைகளில் வாழ்ந்து வருவதால் மேற்கூறப்பட்ட பண்புகள் இவர்களின் பொருளாதாரத்தில் இடம்பெற்றுள்ளன. இன்று இவர்கள் சமவெளிப் பகுதி மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வருவதால் இவர்களின் பொருளாதார நிலை மாற்றங்கள் கண்டுள்ளன.

முன்பு மலையாளிகள் வாரத்தில் ஒருமுறை சந்தைக்குச் சென்று வந்தனர். அப்போது வனங்களில் சேகரித்த பொருட்களையும், காடுகளில் விளைவித்த பொருட்களையும் அதிகாலை வேளையில் ஆண்களும், பெண்களும் தலைச் சுமையாகவோ, கைகளில் தூக்கிக் கொண்டோ, அல்லது மூங்கிலின் இருபுறங்களிலும் வைத்துக் கட்டித் தோளில் சுமந்தோ சந்தைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். அந்தந்தக் காலங்களில் கிடைக்கும் தானியங்கள், பயிறுகள், பழங்கள், வாசனைப் பொருட்கள், தேன், விறகு மூலிகைகள் போன்றவை இதனுள் அடங்கும். இவர்கள் கொண்டுவந்த பொருட்களை விற்பனை செய்யவோ, அல்லது இதனைக் கொடுத்து வேறு பொருட்களை வாங்கவோ செய்கின்றனர். அரிசி, உப்பு, மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய், தீப்பெட்டி, வெற்றிலை, பாக்கு முதலியவைகளைப் பண்டமாற்றத்தில் வாங்கி வந்துள்ளனர்.

### 3.1.5.9.18. மலையாளிகளும் விலங்குகளும்

மலையாளிகளின் வாழ்க்கை பெரும் பகுதி காட்டு விலங்குகளோடும் வீட்டு விலங்குகளோடும் கலந்துள்ளது. அவைகளோடு போராடுவது, உழைப்பது என இவர்களது வாழ்க்கையாகவும் பொழுது போக்காகவும் உள்ளது. இவர்களின் வீட்டு விலங்குகளாக ஆடு, மாடு, பன்றி, கோழி, பூனை, மற்றும் நாய் பேன்றவற்றைக் குறிப்பிடலாம்.

#### 3.1.5.9.18.1. **மாடுகள்**

மலையாளிகளின் உழைப்பிற்கு மாடுகள் பெரும் உதவியாக உள்ளன. ஏர் உழுவதற்கு முக்கியமாகப் பயன்படுத்துகிறார்கள். சில சமயம் பொருளாதார நெருக்கடி காலங்களில் மாடுகளை விற்றுத் தீர்த்துக் கொள்கிறார்கள். இவர்களின் பொருளாதாரத்தை மாடுகளை வைத்தே மதிப்பிடுகின்றனர். மாடுகள் அதிகமாக வைத்துள்ளவர்களுக்கே பெண் கொடுக்கவும் விரும்புகின்றனர். மாட்டின் பாலை அவர்களின் தேவைக்குப் போக கன்றுகளுக்கு விட்டுவிடுகின்றனர். மலையாளிகளின் குடியிருப்புப் பகுதியில் உள்ள அனைவருமே மாடுகளை வளர்த்து வருகின்றனர். குறைந்தது ஐந்து முதல் ஐம்பது மாடுகள் வரை வைத்துள்ளனர். இருப்பினும் எந்தக் காரணத்திற்காகவும் மாட்டுக் கறியை உண்பதில்லை. ‘மாடுகள் எங்களது உயிர்’ என்று கூறுகிறார்கள். வயலில் (காட்டில்) தனியாகப் பட்டி அமைத்து அதில் மாடுகளை அடைத்து வைக்கிறார்கள். இம்முறை காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாக்க உதவுகிறது. இம்மக்கள் மாடுகளுக்குச் செல்லப் பெயர்களை வைத்து அழைக்கின்றார்கள். இப்பெயர் கருப்பன், வெள்ளையன், சுட்டியன், சுழியன் போன்று பல வகையில் அமைந்துள்ளன.

#### 3.1.5.9.18.2. ஆடுகள்

ஆடுகள் இவர்களுக்கு இரண்டாவது செல்லப் பிள்ளையாகும். தங்கள் வீட்டிற்கு அருகிலேயே பட்டி அமைத்து அதில் அவற்றை விட்டுவிடுகின்றனர். காலை காட்டு

வேளைகளுக்குச் செல்லும்போது ஆடுகளை காட்டில் ஓட்டிவிடுகின்றனர். மலை காட்டு வேலை முடிந்ததும் காட்டிலிருந்து ஓட்டிவந்து பட்டியில் ஏற்றிவிடுகின்றனர். மலையாளிகள் ஆடு, மாடுகளின் பாலை அருந்துவதற்கும், மோர், தயிர், நெய் தயாரிக்கவும் பயன்படுத்துகிறார்கள். விழாக்கள், விருந்து போன்ற நாட்களில் ஆட்டை பலியிடுகிறார்கள். ஆட்டுக்கரியை அதிகமாக விரும்பி உண்கிறார்கள். ஆட்டை விற்றும் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள். மேலும் கோழி, பன்றி போன்றவற்றை வளர்ப்பதுடன் அவற்றை விருந்துக்கும் பயண்படுத்துகின்றனர்.

### 3.1.5.9.18.3. நாய் வளர்ப்பு

மலையாளிகள் நாய்களை வளர்த்து வேட்டைக்குப் பயன்படுத்துகிறார்கள். நாய்கள் மிருகங்களின் வருகையையும், இருப்பிடத்தையும் தெரியப்படுத்துகிறது. முக்கியமாக இரவில் மாடுகளின், ஆடுகளின் பட்டிகளைக் காவல்காத்து வருகிறது. மலையாளிகளைத் தவிர பிற இன மக்களை ஊருக்குள் செல்ல நாய்கள் அனுமதிப்பதில்லை. பகல் நேரங்களில் பயிர்களைக் காட்டு விலங்குகள் அழிக்காமல் இருக்க நாய்களைக் கட்டி பாதுகாக்கின்றனர்.

### 3.1.5.9.18.4. பன்றி

சமவெளிப்பகுதிகளில் காணப்படும் பன்றிகளே மலையாளிகளிடமும் வளர்க்கப் பெருகின்றன. வசதியுள்ள சிலர் பத்திற்கும் அதிகமான பன்றிகளை வளர்க்கின்றனர். பன்றிகளுக்கு வரகு, தினைக் கஞ்சியையும், தவிட்டையும், காட்டுக் கிழங்குகளையும் உணவாகத் தருகிறார்கள். பன்றி இவர்களுக்கு முக்கிய உணவாகவும் இருக்கிறது. திருமண விருந்து, இறந்தவர்களுக்கு படைக்கும் சாவு விருந்துகளில் பன்றிக் கறியை முக்கியமாகச் சமைக்கிறார்கள். முனியப் பிச்சுகளான ‘கொல்லை முனி’, ‘காட்டு முனி’ போன்றவற்றிற்கு ஆண்டிற்கு ஒரு முறை பன்றிகளைப் பலியிடுகிறார்கள். பன்றியை வீட்டுத் திண்ணைக்குக் கீழே கூண்டு அமைத்து அதில் பாதுகாத்து வைக்கின்றனர். பகலில் வெளியில் மேய்கிறது. சிலர் பன்றிகளை விற்றும் தங்களுடைய பொருளாதாரத் தேவையை நிறைவுச் செய்துக்கொள்ளின்றனர். இவ்வாறு பல நிலைகளில் பயன் தரக்கூடியதாக மலையாளிகளின் வீட்டு விலங்குகள் இருந்து வருகின்றன.

### 3.1.5.9.19. சாவடி அல்லது சத்திரம்

மலையாளி இனப் பழங்குடியினர் வாழும் இடங்களில் (குடிகளில்) பொதுவாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே இரண்டு சாவடிகள் அல்லது சத்திரம் (பொது இடம்) அமைக்கப்பட்டுள்ளது. இது சுமார் 20 அடி நீளமும், 15 அடி அகலமும் உடையது. இந்தச் சாவடியின் நடுப்பகுதியில் அடுப்பு ஒன்று காணப்படுகின்றது. அதில் எந்த நேரம் தீ எரிந்து கொண்டே இருக்கின்றது. இதில் பொதுவாக இரவு நேரங்களிலும்,

அதிகாலை நேரத்திலும், குளிர் உள்ள வேளைகளிலும் தீ மூட்டுவர். இதைச் சுற்றிலும் மலையாளிகள் அமர்ந்து கதைகளையும், விடுகதைகளையும் பேசிக் காலத்தைப் போக்குகின்றனர்.

ஆண்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் சாவடியில் சிறியவர்கள் முதல் வயதானவர்கள் வரை தங்குகின்றனர். பகல் பொழுதில் காட்டு வேலைகள், வனப்பொருட்களைச் சேகரிக்கச் செல்லுதல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இரவு நேரங்களில் சாவடியில் வந்து தங்குகின்றனர்.

பெண்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் சாவடியில் இளம் பெண்களும், அவர்களுக்குத் துணையாகப் பாட்டிமார்களும் இருப்பர். சாவடியில் இளம் பெண்கள் ஆடல், பாடல் என இருக்கின்றனர். பாட்டிமார்கள் சத்திரத்தில் எரிந்துக் கொண்டிருக்கும் அடுப்பிலேயே வாயில் வரும் எச்சிலைத் துப்பியவாரு கதைகள் பேசி குளிர்காய்ந்து இருக்கின்றனர். ஆண்களுக்கும், பெண்களுக்கும் அமைக்கப்பட்டிருக்கும் சத்திரங்கள் அடுத்தடுத்து அமைத்திருப்பதில்லை. இத்தகைய சாவடிகள் நீலகிரியில் வாழும் கோத்தார், காணிக்காரர், முதுவர் உள்ளிட்ட சில பழங்குடிகளிடமும், இருப்பதைக் காணலாம். மேலும், முதுவர்களின் ஆண்கள் கூடம், **‘இளந்தாளி மடம்’** என்றும் பெண்கள் கூடம் **‘சாவடி வீடு’** என்றும் அழைக்கப்படுகிறது. இந்த இளையோர் கூடங்கள் அனைத்தும் அவ்வின முதியவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்கின. இத்தகைய கூடங்கள் பெரும்பாலும், ஆடல், பாடல் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளும் இடமாகவும் இருந்து வருகின்றது.

‘நடு இந்தியப் பகுதிகளில் வாழும் ‘கோண்டு’ பழங்குடியின மக்கள் ‘சாவடியை’ ‘கோட்டுல்’ என்று அழைக்கப்படுவதாகவும் இது பற்றிய மிகச் சிறப்பான விவரங்களை ‘முரியரும் கோட்டுலும்’ எனும் நூலில் வெரியர் எல்வின் மிக விரிவாக எழுதியுள்ளதையும் பக்தவத்சல பாரதி சுட்டிக் காட்டுகின்றார்’. இவ்வாறு இந்தியாவில் வாழக்கூடிய பல்வேறு பழங்குடிகளைப் பற்றி பல ஒப்புமைக் கூறுகளை வரிசைப்படுத்துவதற்குப் பல சான்றுகள் இன்றைய பழங்குடி மக்களிடையே காணக் கிடைக்கின்றன.

மலையாளிகளும் ‘சாவடியில்’ கூத்துப் பயிற்சி பட்டறையை நடத்துகின்றனர். இப்பயிற்சி பட்டறை காட்டு வேளைகளை முடித்து இரவு 8 மணிக்குத் தொடங்கி இரவு 11 மணிவரை நடைபெறும், இங்குதான் கூத்துக் கலைஞர்கள் பாடல், ஆடல் போன்றவற்றைக் கற்கின்றனர். இவ்வாறு பயிற்றும் பட்டறையாகவும் படுத்துறங்கும் இடமாகவும் மலையாளிகளுக்கு இந்தச் ‘சாவடி’ இருந்து வருகிறது.

### 3.1.5.9.20. சந்தை

மலையாளிகள் பொருட்களை விற்கவும் வாங்கவும் வாரத்திற்கு ஒரு முறை கூடுகின்ற சந்தையைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் செல்லும் சந்தைகள் புதூர், பரமனந்தல், செங்கம், திருப்பத்தூர், மட்ரப்பள்ளி ஆகியனவாகும். இச்சந்தைகளில் புதூர் சந்தை மட்டுமே மலையாளிகள் வாழும் குடியிருப்புப் பகுதியாகும். மற்ற சந்தைகள் சமவெளிப்பகுதியில் நடப்பதாகும். இச்சந்தைகள் ஒவ்வொன்றும் அவர்கள் குடியிருப்பில் இருந்து ஏறத்தாழ பத்து கி.மீ. முதல் முப்பது கி.மீ. தூரம் வரை உள்ளன. போக்குவரத்து வசதில்லாத இம்மலைப் பகுதிகளில் விளையும் பொருட்களைத் சந்தைக்குச் தலைச்சுமையாகவே இவர்கள் எடுத்துச் செல்கின்றனர்.

விளைப்பொருட்களை இவ்வாறு எடுத்துச் செல்வதால் காலமும், மனித உழைப்பும் வீணாகின்றன. பொருட்களை விற்பதில் நுணுக்கங்களை அறியாத இம்மக்களைத் தரகர்கள் ஏமாற்றிக் கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர். வியாபாரிகள் சிலர் மலையாளிகளின் விளைநிலங்களில் விளையும் பொருட்களைக் காயாக இருக்கும் நிலையிலே குறைந்த விலை கொடுத்துக் குத்தகைக்கும் பெறுகின்றனர்.

ஆரம்பகாலங்களில் இவர்கள், வாழைக் குலை, பலாப் பழம், ஈச்சம்பழம், தேன், நெல்லிக்காய் போன்றவற்றை சந்தையில் விற்று விட்டு, உப்பு, எண்ணெய், குழம்பு மசாலப் பொருட்கள் ஆகியவற்றை வாங்கிச் சென்றனர். மரவள்ளிக்கிழங்கு, கவளைக்கிழங்கு, நார்த்தங்காய் போன்ற பல்வேறு வகையான விளைப் பொருட்களையும் சந்தைக்கு எடுத்துச் செல்கின்றனர். சில நாட்டுப்புற வியாபாரிகள் துணிகள், வளையல்கள் போன்றவற்றைத் தலைச் சுமையாக மலைப்பகுதிக்கு எடுத்துவந்து விற்பனை செய்கின்றனர். இப்பழங்குடியின மக்கள் தங்களுடைய காடுகளில் விளையும் பொருட்களை விற்றுத் தேவையானப் பொருட்களை வாங்கிக்கொள்வதற்கு வசதியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அமைத்துக் கொடுத்தால் இவர்களின் வாழ்க்கைச் சிறப்பாக அமையும்.

### 3.1.5.9.21. கூட்டுறவுக் கடை

மலையாளிகளின் குடியிருப்புப் பகுதிகளில் ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு கூட்டுறவு கடை என ஐந்து பஞ்சாயத்துக்கு ஐந்து கடைகள் காணப்படுகின்றன. இக்கடைகளுக்குச் செல்ல வேண்டுமானால் ஐந்து முதல் பத்து கிலோ மீட்டர் வரை நடந்து செல்ல வேண்டும். இந்தக் கடையை மாதத்திற்கு ஒரு முறை மட்டும் திறக்கின்றனர். மற்ற நாட்களில் மூடியே இருக்கின்றன. மலையாளிகளுக்கு அரசு வழங்கும் மலிவு விளைப்பொருட்களையும் பெரும்பான்மைச் சரியாக வழங்குப்படுவதில்லை. இவைகள் கடை வியாபாரிகளுக்கும், விற்பனையாளர்களுக்கும் விற்கப்பட்டு ஒரு சிலப் பொருட்கள் மட்டுமே இவர்களைச் சென்றடைகின்றன. எனவே, அரசு தலையிட்டு இம்மக்களுக்குக் கிடைக்க

வேண்டிய பொருட்களை முறையாகக் கிடைக்கச் செய்தால் இம்மலையாளி பழங்குடி மக்களின் பொருளாதாரத் தேவை ஓர் அளவு நிவர்த்தி ஆகும்.

### 3.1.5.9.22. மலையாளிகளின் சுவற்று ஓவியம்

சவ்வாது மலை மலையாளிகள் திருமணச் சடங்கின் போது மணமகள் வீட்டில், திருமணத்திற்கு முதல் நாள் வாசலில் ஒரு சோடிக் கால் பாதங்களை வரைகின்றனர். அதே போல் திருமணம் முடிந்த பின்னர் மற்றுமொரு சோடிக் கால் பாதங்கள் அருகிலேயே வரைகின்றனர். அது போல் கார்த்திகைத் தீபம், பொங்கல் மற்றும் குல தெய்வ விழாக்களின் போதும் வீடுகளைத் தூய்மை செய்து சுவற்றிற்குச் சுண்ணாம்பு கொண்டு வெள்ளை அடிக்கின்றனர். சுவற்றில் குறிப்பிட்ட செம்மண்ணிலிருந்து சிவப்பு வண்ணமும், அவரை இலையை அரைத்துப் பச்சை வண்ணமும் தயாரித்து, கம்பந்தாள் கொண்டு சுவரில் ஓவியங்கள், கோலங்கள் வரைகின்றனர். இவை சமய விழாக்களின் போதும் மட்டுமே போடுகின்றனர். மேலும் தங்களின் முன்னோர்களை வழிப்படும் விதமாக அவர்களையும் விழாக்களின் போது குறியீடுகளாக வரைந்து, அவர்களுக்குப் பிடித்தமான பொருட்கள் (உணவு, உடைகள், புகையிலை, வெற்றிலைப், பாக்கு, சாராயம், பீடி) போன்றவற்றை அங்கு வைத்துப் படைத்து வழிப்பட்டு வருகின்றனர். அவ்வாறு வழிபடவில்லை எனில் இவர்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்கு மலையாளிகளின் முன்னோர்கள் உறுதுணையாக வரமாட்டார்கள் என்று நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். எனவே, ஒவ்வொரு விழாவின் போதும் தங்களுடைய முன்னோர்களுக்குப் படைக்கும் மரபை இன்றும் கடைபிடித்து வருகின்றனர்.

### 3.1.5.9.23. பிற இனத்தவரோடு தொடர்பு

மலையாளி இனப் பழங்குடி மக்கள் கல்வியறிவு இல்லாதவர்களாகவும், அறியாமையுடையவர்களாகவும் இருப்பதால், பிற இனத்தவர்கள் இவர்களை அணுகும் பொழுது சாதி, மதம் பார்த்தே பழகுகின்றனர். இவர்கள் பிற இனத்தவர்களுக்குப் பெண் கொடுப்பதும் இல்லை, எடுப்பதும் இல்லை. பிற இனத்தவர்களோடு அதிகமாகத் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. ‘தான் உண்டு தன் வேலை உண்டு’ என்று இருப்பர்கள். சில தவிர்க்க முடியாத காரணத்தால் பிற இனத்தவர்களைச் சந்திக்க வேண்டி வந்தால் தங்களுடைய ஊர் பெரியோர்களின் துணையுடனே சந்தித்துக் கொள்கின்றனர்.

மலையாளிகள் நோயாளிகளுக்கு இரவு, பகல் பார்க்காமல் உதவி செய்யும் எண்ணம் உடையவர்களாக இருக்கின்றனர். மருத்துவர்களிடம் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவர்களை ‘ஜோலி’ (தூரிர) கட்டி இடையில் கம்பு நுழைத்து அவர்களை அதில் அமர வைத்துத் தோளில் சுமந்து செல்கின்றனர். நோயைக்

குணப்படுத்துவதற்கு மூலிகைகளைப் பயன்படுத்துகின்றனர். ஆபத்தான சூழ்நிலையில் மட்டுமே அவர்கள் அரசு மருத்துவமனையைச் தேடிச் செல்கின்றனர்.

### 3.1.5.9.24. மலையாளிகள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சிக்கல்கள்

மலையாளி இனப் பழங்குடி மக்கள் மலைசார்ந்த அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வருவதால் அன்றாடம் பலத் துன்பங்களை எதிர்க்கொள்கின்றனர். மழைக்காலமானால் வீடுகளைவிட்டு வெளியில் வரமுடியாத ஒரு சூழல் ஏற்படுகிறது. முன்கூட்டியே சேமித்து வைத்திருக்கும் உணவுகளை உட்கொண்டே வாழவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். மேலும், பலத்த காற்றினால் மரங்கள் விழுவதாலும் நிலச்சரிவுகள் ஏற்படுவதாலும் பெரும் உயிர்ச்சேதங்களையும், பொருள் சேதங்களையும் இவர்கள் சந்திக்கின்றனர்.

மலைப்பகுதிகளில் சரியான சாலைவசதிகள் இல்லாததால் இவர்களின் இழப்பீடுகளை சரியாகக் கணக்கெடுக்கப்படுவதில்லை. அவர்கள் அன்றாடத் தேவைகளை நிவர்த்தி செய்துக்கொள்வதற்கு காட்டிற்குச் சென்றுவிடுவதால் இவர்களைப் பற்றிய தகவல்களும் பதிவு செய்யப்படுவதில்லை. இதன் காரணமாக இங்கு ஏற்படக்கூடிய உயிர்சேதம் போன்ற இழப்பிடுகள் பற்றி வெளி உலகிற்கு ஏதும் தெரியாமல் போய்விடுகிறது.

## 3.2. தொகுப்புரை

சவ்வாதுமலை மலையாளிகளின் குடியிருப்புகயில் கள ஆய்வின் போது கிடைத்த தகவல்கள், சில வரலாற்று நிகழ்வுகள், மலையாளிகளின் பண்பாட்டுச் சான்றுகள், முந்தைய ஆய்வாளர்களின் சில முடிவுகள் ஆகியவற்றை பார்க்கும்போது சில முடிவுகள் நமக்குப் புலப்படுகின்றன.

1. “நாயக்கர் காலத்திலோ அல்லது அதற்கு முன்போ பின்போ ஏதோ ஒரு சூழ்நிலையின் காரணமாக இடம்பெயர்ந்து ஒரு கூட்டம் நாட்டு மக்கள் காட்டு வாழ்க்கையை மேற்கொண்டிருக்கின்றார்கள். காடுகளிலும், மலைகளிலுமான வாழ்வொட்டத்தினால் பிற நாட்டு மக்களோடு இருந்த தொடர்புகள் மெல்ல மெல்ல குறைந்திருக்கின்றது. இதனால் முன்னேற்ற வாழ்வுக்கான பாதையும் புலப்படாமல் போயிருக்கிறது. அதனால் நாகரிக நிலையில் பின்தங்கி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. இருப்பினும் அந்த வாழ்க்கை முறையினை அவர்கள் விரும்பி ஏற்றிருக்கின்றார்கள் என்பதும் உண்மை. அவர்களின் வாரிசுக்களே இன்றைய மலைவாழ் மக்களாவர்”[36].
2. காடுகளில் குடியேறிய நாட்டு மக்கள் குடியேறுவதற்கு முன்பு வெவ்வேறு இனத்தவர்களாக இருந்திருக்க வேண்டும். ஆனால் காடுகளிலும் மலைகளிலும்

குடியேறியபோது சில வாழ்வியல் சார்ந்த சிக்கல்களை சந்தித்திருக்கின்றனர். அதன் பின்னர் வெவ்வேறு இனமாக இருந்த அனைவரும் ஓர் இன மக்களாக ஒன்றிணைந்திருப்பார்கள். இவ்வாறு காட்டுப் பகுதிகளிலும் மலைப் பகுதிகளிலும் ஆங்காங்கே புதியப் பிரிவுகள் உருவாகியிருக்க வேண்டும். அவர்களில் ஒருவராக மலையாளி பழங்குடிகள் இருக்கின்றனர்

3. நீர் நிலைக்கு அருகில் அமையும் மலையாளிகளின் குடியிருப்புக்கள் அவர்களின் நலமான வாழ்வுக்கு உந்து சத்தியாக அமைகிறது. இயற்கையில் கிடைக்கும் புற்கள், மூங்கில்கள், காட்டுக் கழிகள் போன்றவைகளும் இயற்கையோடு இயைந்த பண்பட்ட வாழ்க்கைக்கு வாழ்வாதாரமாக விளங்கி நிற்கிறது.
4. மலையாளி இனப் பழங்குடி மக்களின் ஊர்பஞ்சாயத்தில் சமூகக் கட்டுப்பாடுகளைக் கட்டிக்காப்பதில் இன்றைய ஊர்த்தலைவர், நாட்டாமை, கங்காணிப் போன்றவர்களுக்கு அதிகப்படியான பொறுப்புக்கள் இருப்பதையும், ஊர் சிக்கல்களைத் தீர்த்தல், குற்றங்களை விசாரித்து நடுநிலமையோடு தீர்ப்பு வழங்குதல் காரணமாக இவர்களின் தலைமைப் பண்புகள் உயர்ந்து உள்ளன என்பதையும் உணரமுடிகின்றன. மேலும் முறி வாங்குதல், முறி கட்டுதல் போன்றவற்றில் மலையாளிகளுக்கே உரிய தனித்தன்மைகள் வெளிப்பட்டு நிற்கின்றன.
5. மலையாளிகளின் உணவுப் முறைகள் இயற்கையில் விளைந்த கிழங்குகள், தானியங்கள், கீரை வகைகள், காய்கனிகள் போன்றவை உடலுக்கு எவ்விதத்திலும் தீங்கினை விளைவிக்காதவை. இதனால் இவர்களால் நோயின்றி வாழமுடிகின்றன.
6. அரசு அறிவித்த சலுகைகள் எதுவும் இவர்களைச் சரிவர சென்றடையாததால் வறுமைக்கோட்டுக்குள்ளாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் உணவு, உடை, உறைவிடம் அகியவற்றிலிருந்து இவர்களின் எளிய வாழ்க்கை முறையினை அறிந்துகொள்ள முடிகின்றது.

**அடிகுறிப்புக்கள்**

1. கி.பூ. சுப்பிரமணியம், பண்பாட்டுக் கோலங்கள், ப.19.
2. தமிழண்ணல், ஆய்வில் அறிமுகம். ப.190.
3. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், பக்.301-302.
4. மேலது, ப.303.
5. மேலது, ப.191.
6. Bardhan, The Tribal Problem in India, p.17.
7. J.T.Marilien, Census OF India, 1921, P.221.
8. பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல், ப.192.
9. பு. இராசதுரை, உறவின் முறை, ப.49.
10. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.20.
11. கா. அப்பாதுரை, லெமூரியா (அ) குமரிக்கண்டம், ப.29.
12. பக்தவத்சல பாரதி தமிழக பழங்குடிகள் ப.1.
13. மேலது, ப.62.
14. மேலது, பக்.63-66.
15. சே.ச. ஜான் கென்னடி, கோடைமலைப் பழங்குடியினர், ப.15.
16. சு. சக்திவேல், சமவெளி இருளர் வாழ்வும் பண்பாடும். (ஆய்வேடு)
17. பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், பக்.71,74.
18. கா. ரத்னம், தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், ப.497.
19. The National Of Tribe, p.130.
20. எட்கா் தா்ஸ்டின், தென்னிந்திய குலங்களும் குடிகளும், பக்.499,500.
21. சி. நல்லதம்பி, தமிழகப் பழங்குடி வழக்காற்றில் கல்வராயன் மலைப் பழங்குடி மக்கள், ப.36.
22. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப.467.
23. பிலோ இருதயநாத், கொங்கு மலைவாசிகள், பக்.83-84.
24. ந. முருகேசபாண்டியன், குடுகுடுப்பைக்காரர் வாழ்வியல், ப.23.
25. சத்தியா நடராஜன், (தொ.ஆ) கார்காத்தார் இன வரலாறு, ப.110.
26. மேலது, ப.37.
27. மேலது, பக்.38,39.
28. நா. கதிரை வேற்பிள்ளையின், தமிழ் மொழி அகராதி, ப.478.
29. தமிழ்ச் சொல் அகராதி, ப.209.
30. நா.சி. கந்தையாபிள்ளை, செந்தமிழ் அகராதி,ப.198.
31. Ropere bierstedt, the social order, 3rd edition,p.73.
32. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-13, ப,533.

33. மா. பழனிச்சாமி, கேரள ஊராளிப் பழங்குடிகளின் வழக்காற்றியல், ப.45.

34. மேலது, பக்.74-75.

35. ப.ஆ. தேவ பேரின்பன், தமிழக வரலாற்றுக் கண்ணோட்டம், ப.138.

36. த. கவிதா, மலசர் பழங்குடிள், ப.34.